விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 14 புதன்கிழமை (30.09.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 286

## முகநூலில் படம் பகிர்ந்தமை தொடர்பில் கருத்து முரண்பாடு

### கொடிகாமத்தில் இளைஞன் மீது தாக்குதல்

(கொடிகாமம்)

கொடிகாமம் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் வைத்து இளைஞர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இம்பெற்றுள்ளது,

முகநூலில் புகைப்படம் ஒன்றினை பகிர்ந்தமை தொடர்பாக ஏற்பட்ட கருத்து முரண்பாடுதான் குறித்த சம்பவம் இடம்பெறக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் மந்துவில் கிழக்கு பகுதியைச் சேர்ந்த 28 வயதான இளைஞன் ஒருவரே தாக்குதலுக்கு இலக் 23

### வடக்கு - கிழக்கு ஹர்த்தாலால்

## நாட்டின் பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படவில்லை

### பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடக பிரதானிகளுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது, வடக்கு - கிழக்கில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதில் 23

## 20க்கு எவ்வித சிக்கலும் ஏற்படமாட்டாது

### பத்திரிகை ஆசிரியர்களிடம் பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

20ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு எவ்வித சிக்கலும் ஏற்படாது என்பதில் தான் நம்பிக்கையுடன் இருப்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பத்திரிகைகளின் செய்தி ஆசிரியர்கள் மற்றும் தொலைக்காட்சி, வானொலி நிலையங்களின் செய்திப் பணிப்பாளர்களுடன் நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டார்.

(23ஆம் பக்கம் பார்க்க)



### ரயில் மோதியதில் கிளிநொச்சியில் ஒருவர் உயிரிழப்பு

(முறிகண்டி)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த குளிரூட்டப்பட்ட கடுகதி ரயிலுடன் மோதுண்டு ஒருவர் பலியாகியுள்ளார்.

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3.00 மணி 23

### கஞ்சாவுடன் பளையில் இருவர் கைது

(பளை)

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனையிறவுப் பகுதியில் இரண்டு கிலோ கஞ்சாவுடன் இருவர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் இன்று 23

## 20ஆவது திருத்தத்துக்கு எதிராக அனைத்து சக்திகளையும் இணைத்து போராடுவோம்

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

(கொழும்பு)

20ஆவது திருத்தத்துக்கு எதிரான அனைத்து சக்திகளும் இணைந்து பரந்துபட்ட ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

நீதியான சமூகத்துக்கான தேசிய இயக்கத்தின் செய்தியாளர் மாநாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

மாதுளுவாவே சோபித தேரரின் சிலைக்கு முன்னால் உறுதிமொழி 23

## 13ஆவது அரசியலமைப்பே நடைமுறையில் உள்ளது

### பிரதமர் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

இலங்கையில் தற்போது 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் உள்ளடங்கிய அரசியலமைப்பே நடைமுறையில் உள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் 23

### பளை தம்பகாமம் காட்டுப் பகுதியில் ஆணின் சிதைந்த எலும்புக்கூடு மீட்பு

(கரணவாய்)

பளை தம்பகாமம் காட்டுப் பகுதியில் இருந்து ஆண் ஒருவரின் சிதைந்த எலும்புக்கூடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக 23

### யாழில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற

## விபத்தில் படுகாயமடைந்த மதகுரு உட்பட இருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற வீதி விபத்துகளில் படுகாயமடைந்த மதகுரு உட்பட இருவர் சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 27ஆம் திகதி சுன்னாகத்தை சேர்ந்த வைத்திலிங்கம் நவரட்ணம் 23

## இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவதற்கு தடை

### அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

இலங்கையில் மாடுகளை இறைச்சிக்காக அறுப்பதை தடைசெய்யும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பான யோசனை அடங்கிய 23

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## நன்றி நவிலலும் அழைப்பும்



அன்னை மடியில்
24.03.1946

ஆண்டவர் அடியில்
01.09.2020

அமரர்

## அருளப்பன் மேரி அஞ்சலீனா

" இதோ உன்னை பெயரிட்டு நாமே அழைத்தோம்
ஆகவே நீ எனக்கே சொந்தம் " (எசாயா 43 : 1)

அம்மா .... அம்மா நீங்கள் எம்மைப் பிரிந்து
மாதம் ஒன்று ஆகியதே
எம் கண்களில் வடியும் கண்ணீர்த் துளிகள்
காலங்கள் நீண்டும் காய்ந்திடாதே.

அம்மாவின் இறுதிச் சடங்கில் பங்கு கொண்டு செபித்து அனுதாபத்தைத் தெரிவித்த யாழ். மறைமாவட்ட ஆயர், குரு முதல்வர், அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், துறவிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

01.10.2020 காலை 11.00 மணிக்கு சுன்னாகம் தூய அந்தோனியார் ஆலயத்தில் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(4324)

N.S.B வங்கி முன்வீதி,
கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.

தகவல்
அருட்பணி றொபின்சன் ஜோசப்
குடும்பத்தினர்

077 166 0448, 077 251 6560

# PHARMACISTS ( EXTERNAL ) EXAM

இவ்வாண்டுக்குரிய மருந்தியலாளர் (வெளிவாரி) பரீட்சை 12.12.2020ஆம் திகதி கொழும்பில் நடைபெறும். இப்பரீட்சைக்கான விண்ணப்பத்தை 06.10.2020ஆம் திகதிக்கு முன்னர் CEYLON MEDICAL COLLEGE COUNCIL இற்கு அனுப்பவேண்டும். பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான மீட்டல்/ பரீட்சை வகுப்புக்கள் யாழ்ப்பாணக் கல்லூரியில் (வெளிவாரி பட்டப்படிப்பு ) 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. 02.10.2020 ஆம் திகதி கிழமை நாட்களுக்குரிய வகுப்புகளும் 03.10.2020 ஆம் திகதி வார இறுதி நாட்களுக்குரிய வகுப்புகளும் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். (4322)

NEHRU SIR
தொடர்புகளுக்கு : 077 316 4251

# மரண அறிவித்தல்

## திரு. கணபதிப்பிள்ளை உலகநாதன்

( ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர் - மட்பாண்டக் கூட்டுத்தாபனம், சங்கானை. )



தோற்றம் 26.03.1924 மறைவு 29.09.2020

யாழ்ப்பாணம், குருநாத கோவிலடியைச் சேர்ந்த திரு. கணபதிப்பிள்ளை உலகநாதன் நேற்று (29.09.2020) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை - மங்கயற்கரசி தம்பதியினரின் அன்பு மருமகனும் நவமணியின் அன்புக் கணவரும் அனுஷா (கனடா), பீஷ்மா (முன்னாள் வலம்புரி ஊழியர்), அம்பிகா (கனடா) ஆகியோரின் தந்தையாரும் காலஞ்சென்ற சதீஸ்வரன், தவராணி, ஜக்சன் ஜீவா ஆகியோரின் அன்பு மாமனும் ஜதுஷா, விதுஷா, சௌமிக்கா, பானுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2020) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெற்று பின்னர் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


186/11, குருநாத கோவில் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
077 893 5363

தகவல்:-
உ. பீஷ்மா (மகன்)

# மரண அறிவித்தல்

## மயிலன் (இரத்தினம்) சின்னப்பிள்ளை

**பிறப்பு : 27.01.1927** **இறப்பு : 28.09.2020**



தாவளை, இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் அல்லாரையை வசிப்பிடமாகவும் கொண்ட மயிலன் (இரத்தினம்) சின்னப்பிள்ளை நேற்று முன்தினம் (28.09.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமர் - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற மயிலனின் (இரத்தினம்) அன்பு மனைவியும் பொன்னம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சின்னம்மா, சின்னராசா, மயில்வாகனம், சின்னையா, கிட்டிணபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் நல்லம்மா (பூமணி), தெய்வானை (பூரணம்), சரஸ்வதி (சரசு - டென்மார்க்), வள்ளிப்பிள்ளை (சிவம்), பொன்னம்பலம் (அல்லாரை), இராசநாயகி (இராசு), நடராசா (ரகு- இளவாலை), இராஜேஸ்வரி (ஜெயா - ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நாகராசா (ராசா), நடராசா (நடா - டென்மார்க்), தவராசா, மகேந்திரராணி (இராணி), காலஞ்சென்ற மனோகரதாஸ் (தாசன் - நல்லூர்), சறோஜாதேவி (சறோ), சந்திரசேகர் (சேகர் - ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவநாதன் (சிவா - இலண்டன்), பவானி, வசந்தராசா (வசந்தன்), சுரேஸ் (இலண்டன்), தனேஸ் (பிரான்ஸ்), சிவாகரன் (சிவா - கொழும்பு), ரதன் (டென்மார்க்), அமிர்தன் (அமீர் - டென்மார்க்), ரஞ்சித் (டென்மார்க்), சுபாஜினி, கஜீபன், வினோத், றினோத் (பிரான்ஸ்), றினோஷா (கொழும்பு), ஜெனோத், தனுசாத், சாகினி, கிரிசாந், துஷாகினி, நிருக்ஷன் (ஜேர்மனி), நிர்ஷான் (ஜேர்மனி), செல்விகா (ஜேர்மனி), பிறேமாவதி (இலண்டன்), ரவீந்திரன், தனுஷா, காலஞ்சென்ற பிரியா (இலண்டன்), வாசுகி (பிரான்ஸ்), கலைஞானம் (கொழும்பு), வாசுகி (டென்மார்க்), அஞ்சலி (அன்- தாய்லாந்து), கஜன், தர்சிகா, அனிஸ்ரா, தனுஷியா, வினோத் (செட்டிகுளம்), ஞானதயாளன் ஆகியோரின் பாசமிகு பாட்டியும் றோகீசன் (இலண்டன்), டசீனா (இலண்டன்), தர்மிகா (ஜேர்மனி), பிருந்தாபன், மதுரங்கா, டனோசன், கர்ணி, ரிஷான் (இலண்டன்), மயூசன் (பிரான்ஸ்), மயூசனா (பிரான்ஸ்), ஜனு (பிரான்ஸ்), சோபிகா, சுசந்திகா, அபிர்ணா (டென்மார்க்), அஸ்வின் (டென்மார்க்), ஏன்சலா (டென்மார்க்), அலெக்சாண்டர் (டென்மார்க்), ஏத்திரியன் (டென்மார்க்), சீனியா (டென்மார்க்), அகன்ஜா, சாகதன், பாஸ்கர் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2020) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காலை 10.00 மணியளவில் கொடிகாமம், கட்டைபறிச்சான் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். (C-442)

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.

வினோத் - 076 762 7684
ரகு - 077 721 6911

தகவல்:-
குடும்பத்தினர்

# 20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பிற்கு அரசு தயார்

(கொழும்பு)

**பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைபை பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்திலும், சர்வஜன வாக்கெடுப்பிலும் நிறைவேற்ற வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தால் அதற்கமைய நடவடிக்கைகளை எடுக்க அரசு தயாராக இருக்கின்றது"**



இவ்வாறு நீதி அமைச்சர் மொஹமட் அலி சப்ரி தெரிவித்துள்ளார். நிகழ்வொன்றில் செய்தியாளர்களை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசு எந்தச் சந்தர்ப்பத்திலும் சட்டத்துக்குப் புறம்பாகச் செயற்பட எண்ணவில்லை எனவும் அரசு, நீதிமன்றம் மற்றும் பாராளுமன்றம் தொடர்பில் மிகவும் எச்சரிக்கையாகச் செயற்படுகிறது எனவும் தெரிவித்த அவர்,

20 ஆவது திருத்தச் சட்ட வரைபானது, ஏற்கனவே நடைமுறையில் இருந்த அரசமைப்பு சட்டத்துக்குச் செல்வதாகும்.

விரைவான பொருளாதார அபிவிருத்தியைப் பெற்றுக் கொள்வது இதன் அடிப்படை நோக்கமாகும்"

அதேநேரம் 20 ஆவது திருத்தச்சட்ட வரைபு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சர்வஜன வாக்கெடுப்பின் போது நிரூபிக்க வேண்டுமென நீதிமன்று தீர்ப்பளித்தால் அதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளதாகவும் நீதியமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, சர்வஜன வாக்கெடுப்புக்கு ஏதுவாக அமைந்த எந்த விடயங்களும் 20 ஆவது திருத்தச் சட்ட வரைபுக்குள் இல்லை என்று ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளரான அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (2-4)

# 1000 ரூபாய் சம்பள உயர்வு அறிவித்தார் பிரதமர்

(கொழும்பு)

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1000 ரூபாய் சம்பளத்தை வழங்குவதற்கான அறிவிப்பை பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு வழங்கி இருப்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்..

அலரிமாளிகையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக பிரதானிகளுடனான சந்திப்பின்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் தெரிவித்துள்ள அவர், தமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால் 1000 ரூபாய் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

தற்போது நானே பிரதமர், எனவே பேச்சுவார்த்தை ஊடாக அதற்கான அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

அதேநேரம் 20 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக பிரதமரின் அதிகாரம் குறையாது என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்போது 13 ஆவது திருத்தச்சட்டம் குறித்து இந்தியப் பிரதமர் மோடியுடன் கலந்துரையாடிய விடயம் குறித்து பிரதமரிடம் வினவப்பட்டபோது, சில விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தியதாக தெரிவித்தார்.



இதேவேளை, மஞ்சள் இறக்குமதிக்கான தடை நீக்கப்படாது என்றும் உள்நாட்டு உற்பத்தியாளர்களை பாதுகாக்கவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இதன்போது குறிப்பிட்டார். (2-7)

# 20 பேர் தொற்றிலிருந்து மீண்டனர்

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து வெளிநாட்டவர் உட்பட மேலும் 20 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு சென்றுள்ளதாக சுகாதார அமைச்சு நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளது.

அதன்படி, இதுவரையில் கொரோனாத்தொற்றுக்குள்ளாகி பூரணமாக குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 230 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் தொற்று உறுதியானவர்களில் 120 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்தோடு கொரோனாத் தொற்று சந்தேகத்தில் 46 பேர் தொடர்ந்தும் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையில் இதுவரை 3 ஆயிரத்து 363 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் 13 பேர் உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2-7)

# 2020 தேர்தலில் பெற்ற வெற்றி

## அடுத்த ஐந்தாண்டில் தலைகீழாக மாறலாம்



(கொழும்பு)

அரசியல்வாதிகள் தமது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமைய செயற்படுவதன் காரணமாகவே நாடு தற்போது மிகவும் பின்னோக்கி சென்றுள்ளதாக இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொரணையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசியல்வாதிகள் என்ற வகையில் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்கள் இருக்க முடியாது.


அவ்வாறான தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் இருக்குமாயின் அது வீழ்ச்சி. தற்போதைய அரசாங்கம் சரியாக செயற்படாமல் போனால், அடுத்த தேர்தலில் மக்கள் மிக மோசமான முடிவை வழங்கக்கூடும்.

2020ஆம் ஆண்டு கொண்ட வெற்றியானது 2025 ஆம் ஆண்டு தேர்தலில் தலைகீழாக மாறும் சந்தர்ப்பம் உள்ளது.

2010 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்ட வெற்றி 2015 ஆம் ஆண்டில் தலைகீழாக மாறியது.

2015ஆம் ஆண்டு பெற்றுக் கொண்ட வெற்றியும் 2020 ஆம் ஆண்டில் தலைகீழாக் மாறியது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (2-7)

# வவுச்சருக்கு பதில் சீருடைத் துணி



(கொழும்பு)

வவுச்சருக்கு பதிலாக மாணவர்களுக்கு சீருடைத்துணியை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கையை மேற்கொள்வற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சீருடைத் துணியை பெற்றுக் கொள்வதற்கான வவுச்சரை வழங்குவதற்கு பதிலாக தேசிய துணி தயாரிப்பாளர்களின் மூலம் சீருடைக்கான துணியை வழங்குவதற்காக கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக சம்பந்தப்பட்ட பெறுகை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், நான்கு உள்ளூர் துணி தயாரிப்பாளர்கள் மாத்திரம் விலை விபரங்களை சமர்ப்பித்துள்ளனர்.

இந்த தயாரிப்பாளர்களினால் மொத்தத் துணி தேவையில் சுமார் 40 சதவீதம் தயாரிக்கப்பட்டிருப்பதாக இத்துறை பரிசோதனையின் மூலம் அவதானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இறுதி அளவில் அனைத்து பாடசாலைகளின் சீருடைக்கான துணி தேவையைப் பூர்த்தி செய்வதற்கு இந்த தயாரிப்பாளர்களுக்கு ஆற்றல் இருப்பதாகவும் உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஜ-4)

# முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்காக நாட்டில் குண்டுத் தாக்குதல் நடத்தப்படவில்லை



(கொழும்பு)

தற்கொலை தாக்குதல் நடத்துமளவுக்கு முஸ்லிம்களுக்கு எந்த பிரச்சினையும் நாட்டில் கிடையாதென பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில், வாக்குமூலம் வழங்கிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வேறு நபர்களின் தேவைக்காகவே சஹ்ரான் ஹசீமினால் மேற்கொள்ளப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்பு இருப்பதாக கூறப்படும் சாரா எனும் பெண், இந்தியாவில் இருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளது. அதனால் அவரை உடனடியாக அங்கிருந்து இலங்கைக்கு அழைத்து வரமுடியுமாயின் தாக்குதல் தொடர்பில் அனைத்து தகவல்களையும் அறிந்து கொள்ள முடியும்.

விஷேடமாக இந்த நாட்டில் உள்ள முஸ்லிம்களுக்கு தற்கொலை தாக்குதல் நடத்துமளவுக்கு எந்த பிரச்சினையே? அல்லது தேவையோ கிடையாது" என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# இலகு ரயில் திட்டத்தை நிறுத்த அமைச்சரவை அனுமதி




(கொழும்பு)

கொழும்பை அண்டிய பகுதிகளில் இலகு ரயில் சேவை தொடங்குவதற்கான திட்டத்தை நிறுத்தும் முடிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது குறித்து நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல, எல்.ஆர்.டி. திட்டத்திற்கு மாற்று வழியைப் பார்க்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது எனக் கூறினார்.

இந்த திட்டம் குறித்து அமைச்சரவை விரிவான கலந்துரையாடல்களை நடத்தியதாகவும் இது சிறந்த வழி அல்ல என்று ஒப்புக் கொண்டதாகவும் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டார்.

இந்தத் திட்டத்தை நிறுத்த முடிவு செய்யும் போது திட்டத்தின் செலவு மற்றும் சுற்றுச் சூழலுக்கு சேதம் ஏற்படுவது குறித்து பரிசீலிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில், உத்தேச கொழும்பு இலகு ரயில் சேவை திட்டத்தை உடனடியாக நிறுத்தி வைக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் டாக்டர் பி.பி.ஜெயசுந்தர போக்குவரத்து அமைச்சிற்கு அறிவுறுத்தியதாக போக்குவரத்து அமைச்சின் செயலாளர் அண்மையில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# வங்கிக் கணக்கில் கறுப்புப்பணம் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

வங்கிக் கணக்குகளில் கறுப்புப் பணம் புழக்கத்தில் விடப்பட்டதற்காக வங்கி முகாமையாளர்கள் உள்ளிட்ட பொறுப்பான அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க பாதுகாப்பு அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களில் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய 480 மில்லியன் ரூபாய் பணம் வங்கிக் கணக்கில் பரிமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பில் தகவல்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கணக்குகளை நடத்தி செல்வது தொடர்பில் அந்தந்த வங்கிக் கிளைகளின் முகாமை யாளர்கள் பொறுப்புக்கூற வேண்டும் எனப்பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களின் வங்கிக் கணக்குகளில் பல கோடி ரூபாய் பணம் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளதனை தொடர்ந்து வங்கிகளின் முகாமையாளர்களைப் பாதுகாப்பு அமைச்சிற்கு அழைக்க பாதுகாப்பு செயலாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இவ்வாறான சம்பவங்களினால் வங்கிகளின் நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என பாதுகாப்பு செயலாளர் வங்கி அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# 20 ஆவது திருத்தத்திற்கு எதிரான மனு மேலதிக பரிசீலனைக்காக ஒத்திவைப்பு



(கொழும்பு)

20 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை இன்று வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றில் தாக்கல் செய்யப்பட்ட 20 ஆவது திருத்த வரைபினை சவாலுக்கு உட்படுத்தி உயர் நீதிமன்றில் இதுவரை 39 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

குறித்த மனுக்கள் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனேக அலுவிகார, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட மற்றும் சிசிர த ஆப்ரோ ஆகிய ஐவரடங்கிய நீதிபதிகள் குழு முன்னிலையில் தற்போது விசாரணை இடம்பெற்று வருகிறது.

20 ஆவது அரசியலமைப்பு திருத்த வரைபு எதிர்க்கட்சியின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் பாராளுமன்றத்தில் கடந்த 22 ஆம் திகதி நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் ஒரு வார காலத்தினுள் இதற்கு எதிராக யாரேனும் உயர் நீதிமன்றத்தை நாடினால் 21 நாட்களுக்கு 20 ஆவது திருத்தம் தொடர்பாக எந்த முன்னெடுப்பையும் பாராளுமன்றத்துக்குள் முன்னெடுக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# அரசு பதவியேற்றதிலிருந்து ஏழு ஏக்கர் காடுகள் அழிப்பு

## ஐ.தே.க.குற்றச்சாட்டு



(கொழும்பு)

புதிய அரசாங்கம் பதவியேற்றதிலிருந்து இன்று வரை நாளொன்றுக்கு ஏழு ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சி ஏற்பாடு செய்த 'சுற்றுச்சூழல் குரல்' நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், இதனை சுற்றுச்சூழல் அமைப்புகள் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் இயற்கை வளங்களைப் பாதுகாக்க அனைத்து குடிமக்களும் ஒன்றுபட வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார். சுற்றுச்சூழல் அழிவு இப்போது நாட்டில் ஒரு பெரிய தலைப்பாகிவிட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# மதுவரித் திணைக்கள அதிகாரி பணி நீக்கம்

(கொழும்பு)

போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட இலங்கை மதுவரித் திணைக்கள அதிகாரி பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மாண்டி எனப்படும் போதைப்பொருளுடன் இலங்கை மதுவரித்திணைக்களத்தின் அதிகாரி உள்ளிட்ட இருவர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

ஜயவர்த்தன பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் முன்னெடுத்த விசேட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த இருவரும் கைது செய்யப்பட்டனர். அதில் ஒருவரே பணி நீக்கம் செய்யப்பட்டார். (ஜ-4)

# உலக இருதய நோய் தினத்தை முன்னிட்டு தெளிவூட்டும் விழிப்புணர்வு ஊர்வலம்



(கல்முனை)

உலக இருதய நோய் தினத்தை முன்னிட்டு அது தொடர்பாக தெளிவூட்டும் விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை கல்முனையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனை மற்றும் தொற்றாநோய் பிரிவு என்பன இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட இவ் விழிப்புணர்வு ஊர்வல பேரணியானது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ரஜாப் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பொதுமக்களுக்கு நோய் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

குறிப்பாக புகைத்தல், மதுபானம் அருந்துதல், ஆரோக்கியமான உணவு இன்மை, முறையான உடற்பயிற்சி இல்லாமை போன்ற காரணங்களால் இந்நோய் தாக்கம் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# தேசிய போக்குவரத்து மருத்துவ நிலையங்கள் அதிகாலையில் திறக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் உள்ள தேசிய போக்குவரத்து மருத்துவ நிலையத்தின் அலுவலகங்களை அதிகாலை 5.30 மணியளவில் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் சேவை பெறுநர்கள் அதிகாலை 5.30 மணி முதல் மருத்துவ பரிசோதனைக்கான சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என தேசிய போக்குவரத்து மருத்துவ நிலையத்தின் தலைவர், டாக்டர் எஸ்.கமகே தெரிவித்தார்.

காலை 7.30 மணி முதல் மருத்துவ அறிக்கையை விநியோகிக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் 2 மாதங்களுக்குள் நாடு முழுவதும் இந்த செயற்றிட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

குருநாகல், புத்தளம், கண்டி, அநுராதபுரம், நுகேகொடை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள அலுவலகங்களில் இந்த செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்டங்களில் உள்ள தேசிய போக்குவரத்து மருத்துவ நிலைய அலுவலகங்களிலும் இந்த செயற்றிட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# நாட்டு மக்கள் வாழவே முடியாத நிலையில் அரசியலமைப்பில் மாற்றம் கொண்டு வந்து பயனில்லை

## சஜித் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

மக்களுக்கு வாழவே முடியாத இந்த காலத்தில், அரசியலமைப்பில் மாற்றங்களை கொண்டுவந்து பயனில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பொலநறுவையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இவர் மேலும் தெரிவிக்கையில், "மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளிலிருந்து இந்த அரசாங்கத்தால் தப்பித்துக் கொள்ள முடியாது.

நாட்டில் கொஞ்சம் கொஞ்சமாக மனித வளமும், யானை வளமும் அழிவடைந்து வருகிறது. இந்த இரண்டு வளங்களையும் ஒரு சரியான திட்டமிடலின் ஊடாக மட்டுமே காப்பாற்ற முடியும்.

இதற்கு துரிதமான தீர்வொன்றை வழங்க ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாம் உறுதியாக இருக்கிறோம். அரசாங்கமும் இதனை உணர்ந்து செயற்பட வேண்டும். மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்கித்தான் தேர்தலில் வெற்றி பெற்றீர்கள்.

இதனை நம்பித்தான் மக்களும் இரண்டு தேர்தல்களிலும் வாக்களித்தார்கள். எனவே, மக்கள் எதிர்பார்க்கும் சேவையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். இன்று வாழ்க்கைச் சுமை வானைத் தொட்டுள்ளது. 20 ஐ கொண்டு வந்து ஜனநாயகத்தை அழிக்கவும் அரசாங்கம் முயற்சிக்கிறது.

இதற்காகத்தானா மக்கள் இந்த அரசாங்கத்தை ஸ்தாபித்தார்கள். மக்களுக்கு வாழவே முடியாத இந்த நிலையில், அரசியலமைப்புக்களை மாற்றி எந்தப் பயனும் கிடையாது.

அரசாங்கத்தின் பேச்சுக்கும் செயற்பாட்டுக்கும் இடையில் பாரிய இடைவெளி உள்ளது. எவ்வாறாயினும் நாம் அரசாங்கம் தொடர்பாக உன்னிப்பாக அவதானித்துக் கொண்டுதான் இருக்கிறோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)




# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 19.09.1947



மறைவு 31.08.2020

கடந்த 31.08.2020 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

## திருமதி முருகுப்பிள்ளை நாகம்மா

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 30.09.2020 இன்று புதன்கிழமை காலை 6.00 மணியளவில் குரும்பைக்கட்டி ஞானவைரவர் ஆலய வளாகத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் 02.10.2020 வெள்ளிக்கிழமை மு.ப.11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கார்த்திகேசர் வீதி,
புலோலி மேற்கு, புலோலி.

குடும்பத்தினர்
T.P.No: 077 915 2404

[4307]

# பிரதேச சபைத் தீர்மானங்களை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புகையிலை சார் உற்பத்திப் பொருட்கள் விற்பனை, போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனையைக் கட்டுப் படுத்தல் தொடர்பாக ஏற்கனவே சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப் படுத்த குழு ஒன்று அமைத்து கள விஜயம் மேற்கொள்ள வேண்டுமென சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் வை.ஜெகதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி பிரதேசசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இக் கோரிக்கையை முன் வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், பிரதேசசபை எல்லைக் குட்பட்ட பகுதிகளில் காணப் படும் பாடசாலைகள், மதத் தலங்கள், அரச வைத்திய சாலைகள், பேருந்து நிலை யங்கள், சிறுவர் பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதா னங்கள் போன்ற பொது இடங் களில் இருந்து 500 மீற்றர் தூரத்திற்குள் புகையிலைசார் உற்பத்திப் பொருட்கள் விற் பனை மற்றும் பாவனை, புகையிலை சார் உற்பத்திப் பொருட்களின் விளம்பரங்கள் காட்சிப்படுத்தல் ஆகியன தடை செய்யப்படுவதாக சபையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

ஆனால் குறித்த தீர்மா னம் இதுவரை ஒழுங்கான முறையில் நடைமுறைக்கு வராத நிலை காணப்படுகி றது.

எனவே குறித்த தீர்மான த்தை நடைமுறைப்படுத்த குழு ஒன்றினை சாவகச்சேரி பிர தேசசபை நியமித்து கள விஜ யத்தை மேற்கொள்ள வேண் டும்.

அதன்போது பிரதேசசபைத் தீர்மானத்தை மீறும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட் நடவடிக்கையை எடுக்க வேண் டும் என அவர் மேலும் தெரி வித்தார். (5-4-30)

# மானிய உரங்களை காலத்தோடு வழங்க கோரிக்கை

(கரணவாய்)

வடமராட்சியில் மழை பெய்ய தொடங்கியதையடுத்து விவசாயிகள் தங்களுடைய வயல் நிலங்களை விதைப்பு தற்கான ஆயத்தங்களை ஆரம் பித்துள்ளார்கள்.

கரவெட்டி கமநல திணைக் களத்துக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் உரமானியம் இதுவரை வந்து சேரவில்லை.

இதனால் விவசாயிகள் அடி ப்படை உரம் வாங்குவதற்கு கடைகளை நாடவேண்டிய நிர் ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. BG406. நெல் வகைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு வரு டமும் இந்தநிலை ஏற்பட்டு கொண்டிருக்கிறது.

இதனால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின் றனர். விதைப்பு முடிந்ததும் மானிய உரம் கிடைப்பது வழமை யாக நடைபெற்று வருகின்றது.

பொறுப்பு வாய்ந்த அதிகாரி கள் இவ்விடயத்தைக் கவனத் தில் எடுத்து விவசாயிகளுக்கு மானிய உரம் வழங்குவதற் கான நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்களும் விவசாயிக ளும் கேட்டுக் கொண்டுள்ள னர். (5-4-60)

# பட்டா மோதி மதில் சேதம் சாரதி வைத்தியசாலையில்

(குப்பிழான்)

வேகமாக வந்த பட்டா ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து சுன்னாகம் பொதுநூலக மதி லுடன் மோதுண்டு விபத்து க்குள்ளானதில் மதில் இடிந்து விழுந்துள்ளது. குறித்த பட்டா வைச் செலுத்தி வந்த சாரதி தெல்லிப்பழை ஆதார வைத் தியசாலையில் சிச்சைகளு க்காக அனுமதிக்கப்பட்டுள் ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, சுன்னா கம் கே.கே.எஸ். வீதிவழியாக வந்த வாகனத்தை திருப்ப முற்பட்டபோதே இந்த விபத்து இடம் பெற்றது.

இந்தச் சம்பவத்தில் பட்டா வைச் செலுத்திவந்த மருதனார் மடம் சந்தை வியாபாரியான எஸ்.சயந்தன் (வயது-33) அவ சர அம்புலன்ஸ் மூலம் தெல்லிப் பழை ஆதார வைத்தியசாலை யில் சிகிச்சைகளுக்காக சேர்க் கப்பட்டுள்ளார்.


சம்பவத்தில் சுன்னாகம் பொதுநூலக மதில் இடிந்து விழு ந்ததுடன் வாகனமும் சேதமடை ந்துள்ளது. அத்துடன் அப்பகுதி யில் பொருத்தப்பட்டிருந்த தபால் பெட்டியொன்றும் சேதமடைந் துள்ளது. விபத்து தொடர்பாக சுன் னாகம் பொலிஸார் விசாரணை களைமேற்கொண்டுள்ளனர் (5-4-18)

# ஆன்மீக உரை

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி தேவஸ்தானத்தில் இடம்பெறும் வாராந்த சொற் பொழிவு நாளை மறுதினம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் ஆலய விசாலாட்சி மண்டபத் தில் இடம்பெறும். இதில் சைவ சின்மயா் வி.குகஸ்ரீ விஸ்ணு யன் "கந்தன் கருணை" என் னும் தலைப்பில் ஆன்மீக உரை ஆற்றவுள்ளார். (5-4)

# வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று தேர்



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க வடமராட்சி துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வரு டாந்த மஹோற்சவப் பெருந் திருவிழாவில் தேர்த்திரு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெறும்.

நாளை முதலாம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் சமுத்திரத் தீர்த் தோற்சவமும் நாளை மறுதி னம் 2 ஆம் திகதி வெள்ளிக்கி ழமை முற்பகல் 10 மணியள வில் கேணித் தீர்த்தோற்ச வமும் இரவு 7 மணியள வில் கொடியிறக்க உற்சவமும் நடைபெறவுள்ளன. (5-4-18)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபை புத்தூர் பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தை முன் னிட்டு வீட்டு நூலகம் மற்றும் வீட்டுத்தோட்டம் வைத்திருப் போரையும் ஊக்குவிப்பதற்கான போட்டிகள் நடைபெறவுள்ளன.

எனவே புத்தூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பங்குபற்ற விரும்புவோர் 30.10.2020 ஆம் திகதிக்கு முன்னர் நூல கர், பொதுநூல் நிலையம், புத்தூர் என்ற முகவரிக்கு தங் கள் முகவரி, தொலைபேசி இலக்கம், முழுப்பெயர் என்ப வற்றுடன் விண்ணப்பிக்குமாறு வலி.கிழக்கு பிரதேச சபை புத்தூர் பொதுநூலக நூலகர் அறிவித்துள்ளார். (5)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(குருநகர்)

பகிரங்க சேவைகள் ஓய் வூதியர் நம்பிக்கை நிதியம் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவு சங்கத்தின் 15ஆம் ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளி யீடும் வருடாந்த பொதுக்கூட்ட மும் கடந்த சனிக்கிழமை யாழ். பிரதேச செயலக மகாநாட்டு மண் டபத்தில் வி.சிறீசக்திவேல் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சா.சுதர்ஷன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக ப.சே.ஓ. ந.நிதிய உப தலைவர் (கணக்காளர்) சு.அகிலன், உதவி பிரதேச செயலாளர் திருமதி. றோய் றொபின்சன் சோபிகா, (நிர்வாக உத்தியோகத்தர்) திருமதி. பாலசுப்பிரமணியம் விஜயலட்சுமி ஆகியோருடன் கௌரவ விருந்தினராக (ப.சே. ஓ.நம்பிக்கை நிதியத்தின் மாவ ட்ட சங்க தலைவர்) என்.சிவ ரஞ்சனும் கலந்து கொண்டார்.

புதிய நிர்வாகத் தெரிவில் மாநகர சபை உறுப்பினர் எல்.சி.ஜெயசீலன் தலைவராக வும் என்.சுந்தரராஜன் செயலா ளராகவும் எஸ்.கணேசலிங்கம் பொருளாளராகவும் வி.சிறீசக்தி வேல் உபதலைவராகவும் ஏ.ஆனந்தராசா உபசெயலா ராகவும் தெரிவு செய்யப்பட்ட னர். (5-4-106)

# க.பொ.த.உ/த பரீட்சை அனுமதி அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் 2020ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் இன்று 30 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன. (5-4-104)



**நல்லூர் சாயி இல்லத்தின் ஏற்பாட்டில் பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபாவின் 101 ஆவது ஜனன தினத்தையொட்டி மாபெரும் இரத்ததான முகாம் கடந்த சனிக்கிழமை நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள மாங்கோஸ் நிறுவன மண்டபத்தில் இடம்பெற்றது.** (படம்:- ரவிசாந்)



**கணிதபாட ஆசிரியர்களான வி.குகநாதன், எஸ்.வி. பாலமுரளி ஆகியோரது எழுத்துருவாக்கம் பெற்ற நூல்களில் ஒன்றான தரம்-8 கணிதம் (ஆங்கில மொழி மூலம்) கடந்த ஞாயிற்றுக்கிழமை மஞ்சவனப்பதி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஓய்வுநிலை அரசாங்க அதிபர் நா.வேத நாயகனால் இந்நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் முதல் பிரதியை சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண் ணன் பெற்றுக்கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக தியாகி அறக்கொடை நிறுவன உரிமையாளர் வாம தேவன் தியாகேந்திரன் மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி பிரதி அதிபர் மு.அசோக்குக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு நூல்களும் கற்றல் உபகரணங்க ளும் வழங்கப்பட்டன.** (படம்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# அமரர் .திருமதி. இராசையா இராசம்மா (K.R.S)

# 25 ஆம் ஆண்டு நினைவேந்துருகல்



தோற்றம் 05.05.1925 மறைவு 07.10.1995

இன்று திருமதி. இராசம்மா இராசையா அவர்களின் இருபத்தி ஐந்தாம் சிரார்த்த தினமாகும். இல்லற ஜோதியாக, குடும்ப விளக்காக, மங்கையர் திலகமாக வாழ்ந்த அன்னாரின் நினைவினைப் போற்றி குடும்பத்தவர் அனைவரும் ஒரு விழாவாகக் கொண்டாடி மகிழ்கின்றார்கள். மகாகவி பாரதியார் பாடிய கண்ணன் பாட்டில் "எங்கிருந்தோ வந்தான்" என்ற பாடலில் வருவது போன்று குடும்பத்திற்காக உழைத்தவர், எல்லோரிடத்திலும் அன்பாகப் பழகியவர், சுற்றத்தார் எல்லோரையும் நன்கு வாழ உதவியவர், மிகுந்த இறை பக்தியும் விரத நியமங்களையும் கடைப்பிடித்து வாழ்ந்து வந்தவர். அவர் வாழ்ந்து இருபத்தைந்து வருடங்கள் கழிந்த பின்னரும் அவரின் நினைவுகளைப் போற்றி வாழ்கின்ற அன்னாரது குடும்பத்தவர் அனைவருக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் திருவருள் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

**சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்தக் குருக்கள்,**
**இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் பிரதமகுரு.**

## பெற்றால் தான் தாயாகுமா?

தாயில் சிறந்ததொரு கோயில் எங்குமே கிடைக்காது.அப்படிப்பட்ட ஒரு தாயை எம் இணுவையம்பதி பெற்றெடுத்த தென்றால் இணுவை மண்ணிற்கும் அவர் பெற்றோர்க்கும் பெருமை சேர்க்கும் வகையில் திருமதி.இரா.இராசம்மா அம்மா வாழ்ந்தார்கள். அவர் பண்பிலும் பாசத்தில் அரவணைப்பதில் ஒரு தாயாக வாழ்ந்தார் என்பதில் எதுவித மறுப்பும் கிடையாது. "பிறர் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாக வளரும்" என்ற வாய்மொழிக்கிணங்க பசி என்று போவோருக்குப் பசி தீர்த்த கரம் இன்று எம்மை விட்டு நீங்கி 25 ஆண்டுகள் ஆனாலும் அவரின் புன்னகை அரவணைப்பு இன்றும் எம்மனக் கண்ணில் ஊஞ்சலாடுகிறது. ஒரு பிள்ளை வளர்ச்சி அன்னை வளர்ப்பிலே என்பார்கள். அதற்கிணங்க அவரின் பிள்ளைகள் எல்லோரும் தாய், தந்தைக்கும் எம்மண்ணிற்கும் பெருமை சேர்த்து வாழ்ந்து வருகிறார்கள். இதுவே ஒரு தாய்க்கு பிள்ளைகள் செய்யும் பெரும் காணிக்கை.

நன்றி

**அன்னாரின் சாந்தியடைய**
**இணுவை பரராஜசேகரனை பிரார்த்திப்போமாக.**
**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!!**
**ATC 1985 கரங்கள்**

## ஊர்மக்களால் போற்றப்பட்ட அன்னை

அமரர்.திருமதி.இராசம்மா இராசையா அவர்களின் இருபத்தைந்தாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனைக்கு அஞ்சலிச் செய்தி வழங்குவதில் மிக்க பெருமையடைகின்றேன். மிகப்பெரிய குடும்பத்தின் தலைவியாக வாழ்ந்த அமரர் நல்லதோர் மனைவியாக, பாசம் மிக்க அன்னையாக, அன்பு பாராட்டும் மாமியாக, உறவினர்களை அரவணைக்கும் அன்னையாக வாழ்ந்து பேருடனும் புகழுடனும் இறைவனடி சேர்ந்தவர் என்று சொன்னால் அது மிகையாகாது. "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப் பண்பும் பயனும் அது" என்ற திருவள்ளுவர் வாக்குக்கு ஏற்ப இல்லறத்தை நல்லறமாக வாழ்ந்து காட்டியவர். மூன்று பெண்பிள்ளைகளையும் ஆறு ஆண் பிள்ளைகளையும் ஈன்றெடுத்த அன்னை குடும்பத்தை எப்படி மகிழ்ச்சியாக வைத்திருக்கலாம் என்பதை எமக்கு எடுத்துக்காட்டியவர். அமரர். திருமதி. இராசம்மா அவர்களின் மூன்றாவது மகளை திருமணம் செய்த காரணத்தால் அவர் எனது பாசத்துக்குரிய மாமியாக மாறினார். மருமக்களையும் பிள்ளைகள் போல் பேணும் பண்பையும் பாசத்தையும் அவரிடம் நான் கண்டேன். "தக்கார், தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்" என்ற பொய்யாமொழிப் புலவர் கூற்றுக்கிணங்க அவரது பிள்ளைகள் இன்று வானம் தொடும் புகழுடன் வாழ்வதைக்கண்டு மகிழ்வடைவதுடன் அன்னை வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாக மாறி எம்மை ஆசீர்வதிப்பதனைக் கண்டு அவர் ஆத்மா பரராஜசேகரப்பிள்ளையார் பாதங்களில் இருந்து அருள்புரிய இறைஞ்சுகின்றோம்.

**அன்னையின் பாசம்மிக்க குடும்பத்தினர்**
**(பேராசிரியர் க.தேவராஜா)**

## அமரர்.திருமதி. இராசம்மா இராசையா அவர்களின் இருபத்தைந்தாவது நினைவு நாள் அஞ்சலி

ஸ்ரீபரராஜ சேகரன் மேல் பக்தி பண்ணும் உயர்
பண்புடையாய நல்ல கணவனுடனி ணைந்து
பரராஜ சேகரன் ஊர்ந்து வரும் திருமஞ்சமுன் வாசல் திருக்கதவும்
செய்து வந்த இராசம்மா அன்னையே
இணுவைப் பொது நூலகத்துடன் சமூகப் பணிக்கென
நன்மகளைப் பெற்றுத்தந்த தாயே
மனையறத்தின் மாண்புடைய மனையாளாய் சிறந்த
இல்லத்தரசியாய் நல்லறம் பேணிய அன்னையே
நீங்கள் கிள்ளிக் கொடுத்த பொருளிலும் அள்ளிக் கொடுத்த
அன்பினால் யாவர் மனங்களிலும் தடம் பதித்தீர்!
உங்கள் புன்னகை பொங்கும் முகம் கண்டு காலம்
இருபத்தைந்து ஆண்டுகள் கடந்தாலும்
நன் மனத்தால் வாழ்த்துகின்றோம் இறைபதத்தில்
என்றும் இன்புற்றிருக்கப் பிரார்த்தித்து வணங்குகிறோம்.

**திருமதி. வை.கணேசபிள்ளை கலாபூஷணம்**

## அம்மா என்றால் அன்பு

அம்மா என்பது முதல் வார்த்தை
அதுதான் குழந்தையின் அருள்வார்த்தை
பத்து மாதம் சுமந்து பெற்று
பாசமழை ஊட்டி வளர்த்து
பாலூட்டும் தாலாட்டும்
அன்னைக்கு நிகர் உண்டா
கருவறையில் சுமக்கும் போது
கற்பனையில் மிதந்திடுவாள்
பூமியிலே உதித்தவுடன்
பூரிப்பாய் அணைத்திடுவாள்
நேசத்தின் பொக்கிசமாய்
பாசத்தின் உறைவிடமாய்
தான் உண்ண மறந்தாலும்
தன் உணவை அளித்திடுவாள்
பாட்டியாய் பலநேரம்
பக்குவமாய் எமை வளர்த்த
அன்னையே உன் நினைவுகள்
அடியேன் தாம் மறப்போமா
இருபத்து ஐந்து எனும்
இத்தனை ஆண்டு சென்றும்
உம் நினைவு எங்களையே வாட்டுதம்மா
எப்போதும் அம்மா நீ ஆண்டவன் அடியில்
இன்றும் நாம் உன் நினைவில்...
அன்னையைப் போல் ஒரு தெய்வம் உண்டோ
அவர் அடி தொழ மறப்பவன் மதனிதனா சொல்லுங்கள்...

**இரா. அருட்செல்வம் குடும்பத்தினர், (ATC)**
**ஞானதிருக்கேதீஸ்வரன் குடும்பத்தினர்,(KTC)**
**S.ஜெயபாலன் குடும்பத்தினர்,**
**S.ஹரிசங்கர் (ஆசிரியர்) குடும்பத்தினர்.**

## செஞ்சொற் செல்வரின் பிரார்த்தனையுரை

உழைப்பால் உயர்ந்த உத்தமர் இணுவில் அமரர் இராசையா அவர்களை அறியாதவர்கள் இல்லை. அமரரின் வெற்றிக்கு பக்கபலமாக விளங்கியவர் அவரது பாரியராகிய திருமதி இராசம்மா இராசையா என்றால் மிகையாகாது. தானதர்மங்கள் ஆலய திருப்பணிகள் அனைத்தையும் ஊக்குவித்த அமரர் இராசம்மா அவர்களின் 25ஆவது சிரார்த்த தினம் குறித்து பிரார்த்திக்கின்றேன். தாய், தந்தையின் வழியில் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் சமூக உணர்வோடு செயற்பட்டு வருகிறார்கள். யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு நிறை செல்வத்தோடு வாழ்கிறார்கள். பிற நாடுகளிலும் அமரரின் குடும்பத்தவர்கள் தாம் பிறந்த இணுவில் கிராமத்தின் மீது மிகுந்த அக்கறை கொண்டு உதவி வருகின்றார்கள். இத்தனைக்கும் மூலவேராக விளங்கிய தாயாரை குடும்பத்தவர்கள் மட்டுமன்றி உற்றார், உறவினர்கள், ஊரவர்கள் இன்றும் பெருமையோடு நீள நினைப்பது நன்றிக்குரிய விடயமாகும். எங்கள் குல தெய்வமாகிய இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார், இணுவில் கந்தசுவாமியார் என்றும் குடும்பத்தவர்களின் சிறப்பை காத்தருள வேண்டி அமைகிறேன்.

**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன்**
**தலைவர்,தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம்.**

## உள்ளத்தில் இடம்பிடித்த அன்னையே

எண்பதுகளின் பிற்பகுதியில்
உயர்தரக் கல்வி கற்ற காலம்
என் நண்பன் சிவகுமார் நட்பு
தந்தது புது உலகப் பிரவேசம் என்ன?
இன்னொரு அம்மாவா!
எங்களுக்கு என எண்ணி
எம்மிதயம் குதூகலித்தோம்
89 A/L அணியினர் நாமன்று
இராசம்மா என்றொரு உயர்ந்தவரை
நாம் சந்தித்த வேளைகளில்
இனிய பேச்சு மனம் நெகிழ்ந்த
உபசரிப்பு அனுசரணைப் பதிவளிப்பு
இரவு, பகல் பாராது படிப்புக்கு
அம்மா நீங்களும் பக்கபலமாய்
இருந்ததனை என்றும் மறவாது மனது
உள்ளங்களில் இன்றும் வாழ்கிறீர்கள்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**நண்பர்களுடன் மு.முருகவேள்**

## இராசம்மா மறைந்து இருபத்தைந்து வருடங்கள்

இராசையாவை கரம் பற்றியதால்
இராச அம்மாவானாய் நீ
இராசாக்களை பெற்று வளர்த்ததினால்
இராசம்மாவானாய் நீ
ஆலம் விழுதுகள் போல்
ஆயிரம் உறவு கொண்டாய் நீ
உன்னை இழந்த ஆண்டுகளின் அதிகரிப்பால்
இருபத்தைந்து வருடம் கொண்டாய் நீ
இராசம்மா அல்ல நீ பாசம்மா..!
முகம் தெரியாதவருடனும் உறவாடி,
முகவரி தந்தவள் நீ
மாடி வீட்டு ஏழையல்ல
வாழ்க்கையை வென்ற சீமாட்டி நீ
வார்த்தைகளே இல்லாத வடிவம் நீ
அளவுகோல் இல்லாத அன்பு நீ
சுயநலமே இல்லாத இதயம் நீ
நல்ல பிள்ளைகளைத் தந்தாய் எங்களுக்கு நீ
இன்னும் வாழ்கின்றாய் நீ
எல்லோர் மனங்களிலும்...

**உத்திரன் இணுவில்**
**(இணுவில் பொது நூலகம் சார்பாக)**

# 952 கிலோ மஞ்சள் மூடைகள் பொலிஸாரால் மீட்பு



(மன்னார்)

மன்னார் எருக்கலம்பிட்டியில் 952 கிலோ மஞ்சள் கட்டி மூடைகளுடன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக கடத்தி வரப்பட்டு பதுக்கி வைக்கப்பட்டிருந்த 952 கிலோ மஞ்சள் கட்டி மூடைகளை மன்னார் எருக்கலம்பிட்டி பகுதியில் வைத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை பொலிஸார் மீட்டுள்ளதோடு. சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எருக்கலம்பிட்டி பகுதியில் கடற்படை புலனாய்வு தகவலுக்கு அமைய குறித்த மஞ்சள் கட்டி மூடைகள் மீட்கப்பட்டுள்ளன.

கடற்படையினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுல வீரசிங்கவின் பணிப்பில் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி குமார பல்லேவல தலைமையிலான பொலிஸ் பிரிவினரே மேற்படி மஞ்சள் கட்டிகளை கைப்பற்றி உள்ளனர்.

மேலும் மன்னார் எருக்கலம்பிட்டியை சேர்ந்த சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணையின் பின் சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. (5-4-285)

# வன்னேரிக்குளத்தில் தொடர்ந்து மணல் அகழப்படுவதால் குளத்து நீர் குடிமனைகளுள் புகும் அபாயம்



(அக்கராஜன்)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் கிராமத்தில் தொடர்கின்ற சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக வன்னேரிக்குளத்தின் நீர் குடிமனைகளுக்குள் புகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

வன்னேரிக்குளம் முதியோர் இல்லத்திற்கு பின்பக்கமாக வன்னேரிக்குளத்தின் தொடக்கத்தில் வெள்ளக்கரைப் பகுதியில் தொடர்கின்ற மணல் அகழ்வு காரணமாக வன்னேரிக் குளத்தின் நீர் குடிமனைகளுக்குள் புகும் அபாயம் உருவாகி உள்ளதாக பொது மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

மாவட்டச் செயலகமோ பிரதேச செயலகமோ கனியவளத் திணைக்களமோ வன்னேரிக் குளத்தின் குறித்த பகுதியில் மணல் அகழ்விற்கான அனுமதி வழங்கவில்லை.

இங்கு சட்டவிரோத மணல் அகழ்வே நடைபெறுகின்றது.

வன்னேரிக் குளத்தின் அணைக்கட்டுக்கு அருகில் குறித்த மணல் அகழ்வு கடந்த பத்தாண்களாக நடைபெறுகின்றது.

மணல் ஏற்றும் டிப்பர்கள் வன்னே ரிக்குளம். ஜெயபுரம் வழியாக வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதாகவும் தெரி விக்கப்படுகின்றது. ஏற்கனவே வன்னேரிக்குளம் கிராமம் உவர் ஆபத்தினை எதிர் கொண்டுள்ளது.

இந்நிலையில் தொடரும் மணல் அகழ்வினால் வன்னேரிக்குளம் உடைப்பெடுத்து குடிமனைகளுக்குள் நீர் புகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

எனவே கிளிநொச்சி மாவட்டச் செயலகம் குறித்த மணல் அகழ்வினைக்கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வன்னேரிக்குளம் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-350)

# கடும் காற்றினால் மரம் விழுந்து கடையும் வீடும் சேதம்



(முறிகண்டி)

கிளிநொச்சி ஜெந்திநகர் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற பலத்த காற்றுடன் கூடிய மழையினால் பாரிய மரம் சரிந்து விழுந்ததில் கடை ஒன்று முற்றாக சேதமாகியுள்ளதுடன் வீடு ஒன்று பகுதியளவு சேதமடைந்துள்ளது.

அண்மைக்காலமாக காற்றின் வேகம் அதிகரித்து காணப்படும் நிலையில் நேற்று அதிகாலை பலத்த காற்று வீசியதில் மரம் சரிந்து விழுந்துள்ளது.

இதன்போது தச்சுப் பட்டறை முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளதுடன் அருகிலி ரு ந்த வீடு சிறிதளவு பாதிப்புக்குள்ளானது.

மரம் சரிந்து விழுந்த கடையையும் வீட்டையும் கரைச்சி பிரதேச செயலாளர் ஜெயகரன் நேரில் சென்று பார்வையிட்டார். (5-4-100)

# புத்தக் கண்காட்சியும் விற்பனையும்

(நெளுக்குளம்)

வவுனியாவில் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் வவுனியா மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் இன்று 30 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி முதல் இடம்பெறும்.

"புதிய மழை" எனும் தொனிப்பொருளில் வவுனியா குடியிருப்பு கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ள இப்புத்தக கண்காட்சியில் வவுனியா மாவட்ட எழுத்தாளர்களின் நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டவுள்ளன. (5-4-299)

# தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 157 பேர் சொந்த இடங்களுக்கு



(நெளுக்குளம்)

சீசேல் நாட்டில் இருந்து இலங்கை திரும்பிய நிலையில் வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த 157 பேர் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

கொவிட்-19 நோய்த்தாக்கம் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித்தவித்த இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வரும் செயற்பாடுகள் அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் சீசேல் நாட்டில் இருந்து அழைத்து வரப்பட்ட பயணிகள் பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அவர்கள் 14 நாட்கள் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த நிலையில் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (5-4-299)




# கைவிடப்பட்ட 49 குளங்களை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு பாண்டியன் குளம் கமநலசேவை நிலையத்தின் கீழ் உள்ள சுமார் 49 குளங்கள் கைவிடப்பட்ட குளங்களாக வனவளத் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

முல்லைத்தீவு பாண்டியன் குளம் கமநலசேவை நிலையத்தின் கீழுள்ள விவசாயக் கிராமங்களில் காணப்படுகின்ற குளங்களின் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, கொம்புவைத்தகுளம், மூன்றுமுறிப்புகுளம், வீரப்பிராயர்குளம், இளமருதன்குளம், சிறாட்டிகுளம், எருவில் குளம் உள்ளிட்ட 40 இற்கும் மேற்பட்ட குளங்கள் இவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்ட நிலையில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இருந்தபோதும் சுமார் 49 வரையான குளங்கள் கைவிடப்பட்ட குளங்களாகக் காணப்படுகின்றன.

அதாவது மேற்படி கமநல சேவை நிலையத்தின் கீழ் சுமார் 93 குளங்கள் காணப்பட்டன. இதில் 44 குளங்கள் மாத்திரமே பயன்பாட்டில் இருந்து வருகின்றன.

ஏனைய 49 குளங்களும் கைவிடப்பட்ட குளங்களாக காணப்படுவதுடன் தற்போது வனவளத்திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் குளங்களைப் புனரமைத்து அவற்றின் கீழான விவசாய நிலங்களை பகிர்ந்தளிக்குமாறு பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-315)

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் தேர்த்திருவிழா சிறப்பு மலர் -2020



தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்


ஜனனி நகை மாடம்
JANANY NAHAI MAADAM
22 கரட் தங்க நகைகள் சிறந்த முறையில் குறித்த தவணையில் செய்து தரப்படும்
M.M. Street, Nelliady
மத்திய மகாவித்தியாலய வீதி, நெல்லியடி. Tel :- 077 364 3286

ஸ்ரீ சக்தி மாடம்
SRI SHAKTHY MADAM
எம்மிடம் கோவில் சம்பந்தமான திருவாசி, குடை, விளக்கு வகைகள் சுவாமி சிலைகள், யந்திரங்கள் முதலியன பெற்றுக்கொள்ளலாம்.
Dealers In Brassware, Evarsilver, Aluminium, Gift Items & Home Appliances
பித்தளை பொருட்கள் பொலிஷ் செய்து தரப்படும் பிரதான வீதி, நெல்லியடி.

ARUN Tex & fancy palace
சாறி, சல்வார், ஆண்களுக்கான சேட் ரீசேட், சிறுவர்களுக்கான ஆடைகள்
Textiles, Baby Needs
பிரதான வீதி, நெல்லியடி.
Tel :- 077 714 9459
021 226 2857

பரந்தாமன் சிற்றுண்டிச்சாலை
வெதுப்பக உற்பத்தி நிலையம்
கம்பர்மலை, வல்வெட்டித்துறை

ரவி வெற்றிலைக்கடை
வாசனைப் பொருட்கள், கிரியை பொருட்கள் என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
நெல்லியடி

A/C சிவசக்தி சலூன்
29 வருட சேவையில் புதுப் பொலிவுடன்
SIVASAKTHI SALOON
முற்றிலும் குளிரூட்டப்பட்டது
ஆண், பெண் இருபாலாருக்குமான சிகை அலங்காரம்
ஆண்களுக்கான பேசியல்
சிகை அலங்காரப் பொருட்கள் விற்பனை
மத்திய மகா வி. வீதி, சிக்னல் அருகாமை நெல்லியடி.

நியூ வசந்தா வெண்மையகம்
திருமண வைபவங்களுக்கேற்ற தலைப்பாகை கோட்சூட் வகைகளை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
உரிமையாளர் ம.ரவீந்திரன்
மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி.

நியூ அம்பிகா ஸ்ரோர்ஸ்
NEW AMBIGA STORES
WESTERN UNION MONEY TRANSFER
உள்நாட்டு, வெளிநாட்டு துரித பொதிகள் சேவை
Tel :- 021 226 3571
Mob :- 077 667 9340
Fax :- 021 226 4197
இல.33, பிரதான வீதி, நெல்லியடி
newambiga@gmail.com

ரிசி ரெயிலறிங் சென்ரர்
RISI TAILORING CENTRE
சுடிதார், சாறிபிளவுஸ், ஆண்களுக்கான ஆடைகள் அனைத்தும் தைத்துக் கொடுக்கப்படும்.
T.P.No : 076 411 5464
Viber : 077 720 6244
நவீன சந்தை, நெல்லியடி
New Market Nelliady


## வண்ணத் தேரேறி வருகிறான் மாயவன்

வல்லிபுரப் பதியுறையும் மாயவனே!
எல்லையில்லா கருணையின் தாயவனே
வேண்டுவோர்க்கு அருள்புரியும் வல்லிபுரநாதா
கருடவாகனனே கார்மேக வண்ணா
பாற்கடலில் பள்ளி கொள்ளும் - பரந்தாமா
பக்தர்களைக் காத்திடப் பத்து அவதாரம் எடுத்தாய்
பாண்டவர்கள் துயர்தீர்க்கப் பார்த்தனாய் சென்றாய்
பண்பாட்டுடன் வாழ்ந்த எம் தமிழினம் - இனியாவது
பார்தனில் சிறப்புடன் வாழ்ந்திட
அதர்மங்கள் புரிவோரை அடியோடு அழித்துவிடு மயாவா!
சாந்தி, சமாதானம், மனித நேயம் மீண்டும் நாட்டில்
மலர்ந்திட உன்னிடத்தில் சரணபுகுந்தோம்
நிம்மதியைத் தந்துவிடு மாயவா

நயினை விசு இராசநாயகம்



மலராக்கம்
கு.மகாலிங்கம்
கரணவாய் செய்தியாளர்

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



# செவ்வாழை









டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical Name - Musa acuminata**
**Family - Musaceae**
**Engl - Red banana**

செவ்வாழைப்பழம் மருத்துவப் பண்புகள் நிறைந்ததாகும். மலட்டுத் தன்மையை நீக்குவதில் சிறந்த பழமாகும். செவ்வாழையில் போலிக்க மிலம், பீற்றாகரோட்டீன், உயிர்ச்சத்து C, பொட்டாசியம், இரும்புச்சத்து ஆகியன நிறைந்ததாகக் காணப்படும்.

செவ்வாழைப்பழம் எதிர் ஒட்சியேற்ற தன்மையுடையது. நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்கக் கூடியது. பக்ரீறியா, வைரஸ் தாக்கத்திற்கு எதிராக செயலாற்றும் தன்மையுடையது. தடுமல், சளி போன்றன வராமலும் தடுக்கக் கூடியது.

செவ்வாழைப்பழத்தில் **Fructose, Sucrose, Glucose** போன்ற இயற்கை வெல்லங்கள் காணப்படுகிறது. இது ஓர் சிறந்த காலை உணவாகும். இதிலிருக்கும் வெல்லங்கள் உடலிற்கு மெதுவாக சக்தியைக் கொடுக்கக் கூடியதாக இருப்பதால் இது நாள் முழுக்க சக்தியை கொடுக்கக் கூடிய உணவாகும்.

செவ்வாழைப்பழமானது செரிமானத்தை தூண்டக் கூடியது. ஏனெனில் நிறைய நார்த்தன்மை காணப்படுகிறது. (rich in Fiber) மலக்கட்டு இருக்கும் போது செவ்வாழைப் பழத்தை சாப்பிட்டால் சிறந்த பலனைக் கொடுக்கும். மலத்தை சீராக வெளியேற்றக் கூடிய தன்மை இருப்பதால் குடற்புற்றுநோய் (Colon Cancer) வருவதை தடுக்கக் கூடியது.

நெஞ்செரிச்சலை தணிக்கக் கூடியது செவ்வாழைப்பழமாகும். ஒழுங்காக தினமும் செவ்வாழைப்பழம் சாப்பிட்டுவந்தால் நெஞ்செரிச்சலை (Heart burn) முற்றாக தணிக்கக் கூடியதாக இருக்கும்.

செவ்வாழைப்பழமானது கண்பார்வைக்கு சிறந்ததாகும். **(Improve Vision)** இதில் உயிர்ச்சத்து A காணப்படுவது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். உயிர்ச்சத்து A ஆனது கண்களின் சிறந்த செயற்பாட்டிற்கு அவசியமாகும்.

செவ்வாழைப்பழமானது இருதயத்திற்கு சிறந்ததாகும். **(Heart-Healthy diet)** ஏனெனில் செவ்வாழைப்பழத்தில் பொட்டாசியச்சத்து செறிவாகக் காணப்படுகிறது. இதனால் உயர் குருதி அமுக்கத்தையும் சீராக்கக் கூடியதாகும்.

இரத்தக் குறைவை நிவர்த்திக்கும் தன்மை செவ்வாழைப் பத்திற்கு உண்டு.

செவ்வாழைப்பழத்தில் உயிர்ச்சத்து $B_6$ காணப்படுகிறது. எனவே இரத்தத்தில் ஈமோகுளோபினை அதிகரிக்கும் தன்மையை ஏற்படுத்துவதால் குருதிச்சோகையை (இரத்தக் குறைவை) நிவர்த்தியாக்கக் கூடியதாக இருக்கும்.


தொடர்ந்து புகைப்பிடிப்பவர்கள் அதனை நிறுத்துவதற்கு மாற்று உணவாக செவ்வாழைப்பழங்களை சாப்பிட்டு வரலாம். செவ்வாழைப்பழத்தில் பொட்டாசியம், மக்னீசியம் சத்துக்கள் காணப்படுவதால் புகைப்பிடிப்பதை நிறுத்துவதனால் வரும் பாதிப்புகளை சீராக்கும் தன்மையை ஏற்படுத்தும்.

அதிகரித்த உடல் நிறையை குறைக்கக் கூடிய தன்மையும் செவ்வாழைப்பழத்திற்குண்டு. அதிகளவு நார்ச்சத்து காணப்படுவதால் கலோரியை அதிகரிக்கவிடாது உடல் அனுசேபத்தை (Metabolism) ஐ சீராக்கக் கூடியது.

செவ்வாழைப்பழத்தில் அதிகளவு உயிர்ச்சத்து B-6 காணப்படுவதால் அதுவே செயற்பாட்டிற்கு உதவுகிறது. அத்துடன் சீரான சக்தியை பேணுகிறது.

செவ்வாழைப்பழமானது ஓர்வித சாத்வீக உணவாகும். இதில் காணப்படும் உயிர்ச்சத்து $B_6$ ஆனது செரோனின் ஓமோனாக மாற்றுவதால் மன அழுத்தத்தை சீராக்கக் கூடியதாகவும் இருக்கும்.

மலட்டுத்தன்மையை நீக்குவதற்கு நன்றாக பழுத்த செவ்வாழைப்பழத்தை துண்டு துண்டாக வெட்டி தேனில் ஊற விட்டு தினமும் ஒரு செவ்வாழைப்பழம் வீதம் 3 மாதங்கள் தொடர்ச்சியாக சாப்பிட்டு வர வேண்டும்.



எனவே தினமும் இரவில் படுப்பதற்கு முன்பு செவ்வாழைப்பழத்தை சாப்பிட்டால் தொற்று நோய்கள் வராது.

செவ்வாழைத்தண்டின் சாறு, அருகம்புல் சாறு இரண்டையும் 15 மில்லி வீதம் ஒன்றாகக் கலந்து தினமும் 48 நாட்கள் தொடர்ந்து எடுத்துவர உடல் எடை குறையும். 2 வார இடைவெளிவிட்டு மீண்டும் பயன்படுத்தலாம்.

செவ்வாழைத்தண்டை அடிக்கடி சமைத்துச் சாப்பிட்டால் வயிற்றுக் கோளாறுகள் நீங்கும்.

செவ்வாழைப் பிஞ்சுக்காய்களை உலர்த்தி பொடி செய்து 4 கிராம் (1/2 தேக்கரண்டி) அளவு சாப்பிட்டு வந்தால் வயிற்றுப் புண் ஆறும்.

செவ்வாழைத்தண்டுச்சாறு 2 டம்ளர் அளவு தினமும் குடித்துவந்தால் கல்லடைப்பு நீங்கும்.

செவ்வாழைப்பூக்களை இடித்துச் சாறு எடுத்து 60 மில்லிக்கு பனங்கற்கண்டு சேர்த்து குடித்து வந்தால் பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைபடுதல் நீங்கும்.

செவ்வாழைத்தண்டுச் சாறு எடுத்து மண்சட்டியில் ஊற்றி சூடேற்றி குடித்தால் சிறுநீர்க்கடுப்பு குணமாகும்.

செவ்வாழைத் தண்டானது நார்ச்சத்து மிக்கது. மிகவும் சுவையானது. பச்சடிக்கறி, கூட்டு, குழம்பு என பலவிதமாகக் சமைக்கலாம். பச்சையாகவோ வேகவைத்தோ பயன்படுத்தலாம். மலச்சிக்கலுக்கும், கல்லடைப்பிற்கும் சிறந்த மருந்தாகும்.

இதன் பூக்களும் வாய்ப்புண், குடற்புண் இவைகளை மாற்றவல்லது. சுவையான சத்துமிக்க உணவுப் பொருள்.

சித்தமருத்துவத்தில் பன்னிரண்டு வகையான முக்கிய வாழை இனங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. செவ்வாழை, அடுக்கு வாழை, இரசதாளி, கருவாழை, கொட்டைவாழை, நவரை வாழை, நாட்டு வாழை, பசும் வாழை, பேயன் வாழை, மலை வாழை, மொந்தன் வாழை, வெள் வாழை என்பனவாகும். இவற்றுள் செவ்வாழை மருத்துவப்பண்புகள் நிறைந்ததாகும்.

பொதுவாக வாழையின் பூ, பிஞ்சு, காய் என்பன துவர்ப்பு செய்கை உடையனவாக இருக்கும். வாழைக்கட்டை நீர் குருதிப் பெருக்கை அடக்கக் கூடியது.

வாழைக்கட்டை, தண்டு என்பன அதிகரித்த பித்தத்தை தனிக்கக் கூடியது. சிறுநீரை பெருக்கக் கூடியதுமாகும்.

வாழையின் இலை, பட்டை என்பன குளிர்ச்சியை உண்டுபண்ணக்கூடியது. பொதுவாக வாழைப்பழங்கள் உள்ளகலாற்றி, மலமிளக்கி, போசணகாரி செய்கைகளைக் கொண்டது.

வாழையிலையில் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் தோல் சுருங்காது. மேலும் கரியமில வாயுவை உள்ளிழுத்து அதிகமான பிராண வாயுவை வெளியிடும் தன்மை வாழை - மரத் திற்கும், இலைக்கும் உண்டு.

100 கிராம் வாழைப்பூவிலுள்ள சத்துக்கள், ஈரலிப்பு 83.2 கிராம், புரதம் 2.1 கிராம், கொழுப்பு 1.0 கிராம், கபோவைதரேற்ற 10.6 கிராம், கல்சியம் 23 மில்லிகிராம், பொஸ்பரஸ் 38 மில்லிகிராம், இரும்பு 2.0 மில்லிகிராம், பீற்றா கரோட்டீன் 126 மை.கிராம், நார் 1.7 கிராம், உயிர்ச்சத்து C 96 மில்லி கிராம்.

மாதவிடாய் காலத்தில் ஏற்படும் இரத்தப் போக்கை கட்டுப்படுத்தும் தன்மையும் வாழைப்பூவிற்கு உண்டு.

# இராசிபலன்

30.09.2020
புரட்டாதி 14, புதன்கிழமை,
சதுர்த்தசி பின்னிரவு 1.07 மணிவரை
பூரட்டாதி பின்னிரவு 4.42 மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
சந்திராஷ்டமம் மகம்
கடையிற்சுவாமி குருபூஜை வளவன்



மேஷம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.



ரிஷபம்

இல்லத்தின் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.



மிதுனம்

கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.



கடகம்

மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.



சிம்மம்

குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய நபர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், கௌரவமான நாள்.



கன்னி

சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், தன்னம்பிக்கை துளிவிடும் நாள்.



துலாம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை கூடும், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம்.



விருச்சிகம்

நண்பர்களின் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், தாய்வழி உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும்.



தனுசு

செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன நன்மையுண்டு.



மகரம்

தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, கல்யாணக் கனவுகள் நனவாகலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.



கும்பம்

சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், திடீர் செலவுகள் ஏற்படலாம், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.



மீனம்

தொழில் நலன் கருதி பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

உன் மனமே உனக்கு எதிரியாகிவிடாமல் பார்த்துக்கொள்

# ‘20’ ஆவது சட்டமூலத்தில் மேலும் சில திருத்தங்கள்

## சட்டமா அதிபர்

(கொழும்பு)

20 ஆவது திருத்த சட்டமூலத்தில் மேலும் சில திருத்தங்களை முன்வைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளார்.

இதன்படி குறித்த மேலதிக திருத்தங்கள் பாராளுமன்ற அமர்வின் போது முன்வைக்கப்படவுள்ளதாக தெரிவித்த சட்டமா அதிபர் 20 ஆவது திருத்த சட்ட மூலத்தை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய் யப்பட்டுள்ள மனுக்கள் தற்போது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்ற நிலையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து மனுக்களினதும் பிரதிவாதியாக சட்டமா அதிபர் பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)


## வேலைக்கு ஆள் தேவை

முல்லைத்தீவுப் பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை. தோட்டம் சம்பந்தமான சகல வேலைகளும் செய்யக் கூடியவராக இருக்க வேண்டும். குடும்பமாகத் தங்குவதற்கான வசதி உண்டு. தோட்டங்களில் தனியாளாக வேலை செய்து பழக்கம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம்: பயிற்சிக் காலத்தின் பின் சம்பளம், போனஸ், சலுகைகள் அடங்கலாக ரூபா 40, 000 வழங்கப்படும். காவல் வேலைக்கும் ஆள் தேவை.

தெலைபேசி: +9477 168 1697
Whats App, Viber, imo- +9477 113 3667
(சி-430)

## பணிப்பெண் தேவை

திக்கம் பகுதியில் 5 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டில் தங்கி இருந்து வேலை செய்ய பணிப்பெண் தேவை. சம்பளம் 20,000/= -25,000/=
தொ.இல:- 076 022 9589 (சி-431)

## சேவை

நீங்கள் அடகு வைத்த மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப் பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை. AAA Gold Center (C-1034)
076 568 4346

## வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம்
## அங்கத்தவர் பட்டியல் காட்சியப்படுத்தல்

எமது சங்கத்தின் 30.06.2020 வரையான பொதுச்சபைக்கூட்டத்திற்கு சமுகமளிக்கவும் வாக்களிக்கவும் தகைமை பெற்ற அங்கத்தவர் பட்டியல் தலைமைக்காரியாலயத்தில் 29.09.2020 தொடக்கம் 15.10.2020 வரை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி பட்டியல் தொடர்பில் கீழ்குறிப்பிடப்பட்ட ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 29.09.2020 தொடக்கம் 15.10.2020 வரையான காலப்பகுதிக்குள் சங்க செயலாளருக்கு எழுத்து மூலம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆட்சேபனை தெரிவிக்கும் விடயங்கள்

1. உறுப்பினர் ஒருவரின் பெயர் காணப்படாமை
2. உறுப்பினர் பெயர், உறுப்பினர் இலக்கம் மற்றும் முகவரி தவறாகக் காணப்படுதல்
3. ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் ஒரு உறுப்பினர் பெயர் காணப்படுதல்.

செயலாளர்
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம்.
வட்டுக்கோட்டை.
(4319)

## சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

திருமதி. சரஸ்வதி செல்வநாயகம் (மல்லிகா)
பயிற்றப்பட்ட விசேட ஆரம்பக்கல்வி (SLTS-1)



அமைதியும், ஆனந்தமும் கொண்டு
அகமகிழ்வுடன் அனுதினம் போதிக்க
கலைஞானம் தனைக் கொண்டு
கற்றல், கற்பித்தலை கச்சிதமாகச் செய்து
முத்தமிழை முறையாக புகட்டியவர் மல்லிகா
முத்தான வாழ்த்துக்கணை
அகமகிழ்ந்து சொல்கின்றோம்.

சேவைக்காலம் - (1988.11.15–2020.09.27)
பகுதித்தலைவர் - ஆரம்பக்கல்வி (2013–2020)
வேணாவில் சிறி முருகானந்தா வித்தியாலயம்
மு/புதுக்குடியிருப்பு.
மு/கோம்பாவில் விக்னேஸ்வரா வித்தியாலயம்
1988.11.05–2005.02.08
மு/புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை
2005.02.09–2006.01.31
மு/வேணாவில் சிறி முருகானந்தா வித்தியாலயம்
2006.02.01–2020.09.27

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
மு/வேணாவில் சிறிமுருகானந்தா வித்தியாலயம்
புதுக்குடியிருப்பு.
(சி-428)

# பாரதம்

## பேயை விரட்ட பிரம்பாலடித்த பூசாரி மூன்று வயதுச் சிறுமி பரிதாப பலி!



(பெங்களூர்)

பேய் பிடித்து இருப்பதாக கூறி பிரம்பால் தாக்கியதில் 3 வயது குழந்தை பரிதாபமாக உயிரிழந்தது. இதையடுத்து கோவில் பூசாரியை பொலிஸார் கைது செய்தனர்.

பிரவீன் சியாமாலா தம்பதிக்கு 3 வயதில் பூர்விகா என்ற மகள் இருந்தாள். இந்த குழந்தை கடந்த சில நாட்களாக பகல்-இரவாக தூங்காமல், சாப்பிடாமல் இருந்துள்ளது.

இதனால் பயந்துபோன குழந்தையின் பெற்றோர், அந்தப் பகுதியில் உள்ள கோவிலுக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அந்த கோவிலின் பூசாரியிடம் குழந்தையைக் காட்டி, சம்பவம் பற்றி கூறியுள்ளனர். அதற்கு அவர் குழந்தைக்கு பேய் பிடித்து இருப்பதாகவும் அதற்கு பூஜை செய்தால் பேயை விரட்டிவிடலாம். அதன் பின்னர் குழந்தை சரியாகத் தூங்கும், நன்றாகச் சாப்பிடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதற்கு குழந்தையின் பெற்றோரும் சம்மதம் தெரிவித்துள்ளனர். அதன்படி நேற்று முன்தினம் குழந்தைக்கு பேயை விரட்டுவதாகக் கூறி பூசாரி தனது வீட்டுக்கு அழைத்து வந்துள்ளார். பின்னர் வீட்டில் வைத்து சிறப்பு பூஜை செய்து குழந்தையை பிரம்பால் சரமாரியாக அடித்துள்ளார்.

இதனால் திடீரென்று குழந்தை மயக்கம் போட்டு விழுந்தது. இதையடுத்து குழந்தை பூர்விகாவை, பெற்றோரிடம் ஒப்படைத்துவிட்டு பூசாரி அங்கிருந்து சென்றுவிட்டார். இதனால் பயந்துபோன பெற்றோர் உடனே ஒரு வாகனத்தில் குழந்தையை சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். ஆனால் வழியிலேயே குழந்தை பரிதாபமாக உயிரிழுந்தது. இதனால் பெற்றோர் குழந்தை உடலை பார்த்துக்கதறி அழுதனர். மேலும் அவர்கள், குழந்தையின் சாவுக்கு பூசாரி தான் காரணம் என்று குற்றம் சாட்டினர்.

இதுகுறித்து தகவல் அறிந்த சிக்கஜாஜூர் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். அப்போது பேய் பிடித்து இருப்பதாக கூறி குழந்தையை பூசாரி பிரம்பால் அடித்ததும், அதனால் குழந்தை வலி தாங்க முடியாமல் மயங்கி விழுந்து இறந்ததும் தெரியவந்தது. இதையடுத்து பூசாரியை பொலிஸார் கைது செய்தனர். அவர் மீது பொலிஸார் கொலை வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (2)



(ஜகார்த்தா)

இந்தோனேசியா நாட்டில் பெய்த் கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர். இந்தோனேசியா பல்வேறு தீவுக்கூட்டங்களைக் கொண்ட நாடு. இங்கு நிலநடுக்கம், கனமழை, வெள்ளம், நிலச்சரிவு போன்ற இயற்கை பேரிடர்கள் அடிக்கடி நிகழ்வது வழக்கம். இந்த இயற்கை பேரிடர்களால் அந்நாட்டு மக்கள் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாகி வருகின்றனர்.

இந்நிலையில், அந்நாட்டின் தீவுக்கூட்டங்களில் ஒன்றான போர்னியோ தீவில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இந்த கனமழை காரணமாக அப்பகுதிகளில் அவ்வப்போது நிலச்சரிவு ஏற்பட்டு வருகிறது. போர்னியோ தீவின் தரகன் பகுதியின் நேற்று முன்தினம் பெய்த கனமழை காரணமாக திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் அப்பகுதியில் இருந்த சில வீடுகள் மண்ணுக்குள் புதைந்தன. வீடுகளில் தங்கி இருந்த பலரும் உயிருடன் மண்ணுக்குள் புதைந்தனர்.

இந்த நிலச்சரிவு குறித்து தகவலறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டனர். இதில் 4 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். ஆனாலும், இந்த நிலச்சரிவில் சிக்கி 5 குழந்தைகள் உட்பட 11 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். அப்பகுதியில் மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (2)

## இந்தோனேசியாவில் நிலச்சரிவில் சிக்கி 5 குழந்தைகள் உட்பட 11 பேர் பலி!

## காட்டுத்தீயால்

## எதிர்கொள்ள

அ(கலிபோர்னியா) --


மெரிக்காவின் கலிபே

ஏற்பட்ட காட்டுத் தீ ஒரேச

மாகாணங்களில் பற்றி எரி

பகுதியில் உள்ள நாபா பள்ள

திடீரென புதிதாக காட்டு நெரு



கிளாஸ் பயர் (GlassFire) என்று பெயரிடப்பட்டுள்ள இந்த நெருப்பு மேலும் தீவிரமாகப் பரவும் அபாயம் இருப்பதால் அதனை அணைக்கும் பணியில் ஆயிரக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில். பெரு நெருப்பு

காரணமாக நாபா பள்ளத்

கலிஸ்டோகா பகுதிகளைச்

ஆயிரக்கணக்கான மக்கள்

குடியிருப்புகளை விட்டு வெ

வருகின்றனர்.

மேலும் சோனாமா மற்று

மாவட்டங்களில் உள்ள ச

## மூளையை தின்னும் நுண்ணு

## அச்சத்தில் மக்கள்

### அமெரிக்காவில் அவசரநிலை பிரக

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் நேகிளேரியா ஃபவ்ளரி (Naegleria fowleri) என்ற மூளையைத் தின்னும் ஆபத்தான நுண்ணுயிரியால் பாதிக்கப்பட்டு 6 வயதுச் சிறுவன் உயிரிழந்ததை அடுத்து எழுந்துள்ள அச்சத்தால் மாகாணத்தின் பிரசோரியா கவுண்டியில் சுகாதார அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

மிதமான சூடுள்ள நீரில் பரவும் நேகிளேரியா ஃபவ்ளரி நுண்ணுயிரி தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விரைவான நடவடிக்கை எடுத்து வருவதாக டெக்சாஸ் மாகாண ஆளுநர் கிரெக் அபோட் தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதியில் நீரின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நன்னீரில் இயற்கையாகவே உரு

வாகும் நேகிளேரியா ஃப

ணுயிரிகள், அவ்வப்பே

பல்வேறு பகுதிகளிலும்

படுகின்றன. பொதுவாக

ணுயிரி அடங்கிய நீர் மூ

உடலில் நுழைந்து பின்

க்குச் செல்லும்போது மக்

ப்பை ஏற்படுத்துகிறது.

மேலும், அசுத்தமான

பருகுவதன் மூலம் இ

ஒருவருக்கு ஏற்படாது என்

பாதித்த ஒருவரிடமிருந்

வருக்கு இது பரவாது எ

அமைப்பு தெரிவித்துள்ள

நேகிளேரியா ஃப

ணுயிரியால் பாதிக்கப்ப

காய்ச்சல், குமட்டல், வ

வலி உள்ளிட்ட அறிகுறி

இதனால் பாதிக்கப்பட்

லானோர் ஒரே வாரத்தி

விடுவர்.

# வெளிநாடு

# ...ல் பாரிய ஆபத்தை ...ளும் கலிபோர்னியா

ா) ------------------------

...கலிபோர்னியா மாகாணத்தில் மேற்குப் பகுதியில் ... ஒரேகான் மற்றும் வோஷிங்டன் உள்ளிட்ட ...றி எரிந்து வருகிறது. இந்நிலையில் வடக்குப் ... பள்ளத்தாக்கு பகுதியில் நேற்று முன்தினம் முதல் ...டு நெருப்பு உண்டானது.



...பா பள்ளத்தாக்கு, ...திகளைச் சேர்ந்த ...ன மக்கள் தங்கள் ... விட்டு வெளியேறி

...ாமா மற்றும் நாபா ... உள்ள சாண்டா ரோசா மற்றும் சென் பெஹலினாவில் வசிக்கும் 70,000 இற்கும் மேற்பட்ட மக்களை உடனடியாக வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளது.

தீக்காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலைகளில் 21 பேர் சிகிச்சை பெற்றுள்ளதாக அப்பகுதியில் உள்ள உள்ளூர் வைத்தியசாலைகள் தெரிவித்துள்ளன. இப்பகுதிக்கு சிவப்புக் கொடி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சாஸ்தா கவுண்டியில் வேகமாக பரவும் காட்டுத் தீ விபத்தின் விளைவாக மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

கலிபோர்னியாவில் நடப்பாண்டு ஏற்பட்ட காட்டுத் தீ காரணமாக இதுவரை 37 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பு நாசமாகியுள்ளது.

இதுவரை ஏற்பட்ட காட்டுத்தீயில் இது புதிய வரலாற்றுப் பேரழிவு என வர்ணிக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னியாவில் இந்த ஆண்டு 8,000 காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. இதுவரை 29 பேர் உயிரிழந்துள்ளார்கள். 7,000 இற்கும் மேற்பட்ட கட்டடங்கள் தீக்கிரையாகியுள்ளன. (2)


## ...ண்ணுயிரி ...ள்

### ...ல பிரகடனம்

...ளேரியா ஃபவ்ளரி நுண் ... அவ்வப்போது உலகின் ...திகளிலும் கண்டறியப் ... பொதுவாக இந்த நுண் ...கிய நீர் மூக்கு வழியாக ...ழைந்து பின்னர் மூளை ...ம்போது மக்களுக்கு பாதி...துகிறது.

...அசுத்தமான தண்ணீரை ... மூலம் இந்தத் தொற்று ...ற்படாது என்றும், தொற்று ...வரிடமிருந்து மற்றொரு ... பரவாது என்றும் அந்த ...ரிவித்துள்ளது.

...ரியா ஃபவ்ளரி நுண் ...பாதிக்கப்பட்டவர்களுக்கு ...மட்டல், வாந்தி, தலை...ட அறிகுறிகள் இருக்கும். ...ாதிக்கப்பட்ட பெரும்பா...ரே வாரத்தில் உயிரிழந்து ... (2)



2050 ஆம் ஆண்டளவில் கடல்களில் பிளாஸ்டிக் கழிவுகளை கொட்டுவதை நிறுத்தி, கடல் மாசுபாட்டைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பூமியை "அவசர நிலையிலிருந்து" பாதுகாக்க இயற்கைக்கான உறுதிமொழியில் 64 நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் ஒன்றிணைந்து ஒப்பந்தம் ஒன்றில் கைசாத்திட்டுள்ளனர். இவ் உடன்படிக்கையில், 2050 ஆம் ஆண்டளவில் உலகம் "இயற்கையோடு இணக்கமாக வாழ" உதவுவதன் மூலம் காலநிலை மாற்றத்தை எதிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

## மதுபான விடுதியில் துப்பாக்கிச்சூடு 11 பேர் சம்பவ இடத்தில் பலி!



(மெக்சிக்கோ சிட்டி)

மெக்சிக்கோவில் மதுபான விடுதியில் நடந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் 4 பெண்கள் உட்பட 11 பேர் சம்பவ இடத்திலேயே இரத்த வெள்ளத்தில் உயிரிழந்தனர். மெக்சிக்கோ நாட்டின் மத்திய பகுதியில் உள்ள குவானாஜுவாடோ மாகாணத்தில் போதைப்பொருள் கடத்தல் கும்பல்கள் ஆதிக்கம் மிகுந்து காணப்படுகிறது. தொழில் போட்டி காரணமாக போதைப்பொருள் கடத்தல் கும்பல்களுக்கு இடையே அடிக்கடி வன்முறை சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன.

இந்த நிலையில் அந்த மாகாணத்தில் ஜரல் டெல் புரோகிரெசோ நகரில் உள்ள ஒரு மதுபான விடுதியில் நேற்று முன்தினம் காலை பெண்கள் உட்பட ஏராளமான இளைஞர்கள் மது அருந்திக் கொண்டிருந்தனர். அப்போது கார்களில் வந்து இறங்கிய மர்மக் கும்பல் மதுபான விடுதிக்குள் நுழைந்து கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதனால் அங்கு பெரும் பதற்றமும் பீதியும் உருவானது.

மதுபான விடுதிக்குள் இருந்தவர்கள் உயிரை காப்பாற்றிக்கொள்ள நாலாபுறமும் சிதறி ஓடினர். ஆனாலும் அந்த மர்மக் கும்பல் சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 4 பெண்கள் உட்பட 11 பேர் சம்பவ இடத்திலேயே இரத்த வெள்ளத்தில் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர். இதுபற்றிய தகவல் கிடைத்ததும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். ஆனால் அதற்குள் தாக்குதல் நடத்திய மர்மக் கும்பல் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டது. (2)

## குறி தவறிய ஏவுகணை 5 உயிர்களை காவு வாங்கியது



(பக்தாத்)

ஈராக்கில் உள்ள அமெரிக்க படைத் தளத்தைக் குறிவைத்து ஈரான் ஆதரவு கிளர்ச்சியாளர்கள் நடத்திய ஏவுகணை தாக்குதலில் பொதுமக்கள் 5 பேர் உயிரிழந்தனர். ஈராக் தலைநகர் பக்தாத் விமான நிலையத்திற்கு அருகே அமைக்கப்பட்டுள்ள இராணுவ தளத்தில் உள்ள அமெரிக்க படையினரை குறிவைத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு திடீரென ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஈரான் ஆதரவு கிளர்ச்சியாளர்களால் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் தவறுதலாக இராணுவ தளத்திற்கு அருகே உள்ள குடியிருப்பு பகுதியை தாக்கியது. இதில் குடியிருப்பு பகுதியில் வசித்து வந்த ஈராக் நாட்டைச் சேர்ந்த இரண்டு பெண்கள், 3 குழந்தைகள் உட்பட மொத்தம் 5 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த தாக்குதலுக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. (2)

# சிறுவர்கள் தம்மை தாம் காப்பாற்றிக்கொள்ள

## அடிப்படை பாலியல் கல்வி அவசியம்

### நீதியமைச்சர் அலிசப்ரி

**(கொழும்பு)**

**சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க பாலியல் கல்விதான் முன்னோக்கிய வழி என நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**



சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகள் குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

“குழந்தைகளின் உரிமைகள் என்ன, வரம்புகள் என்ன என்பதை நாங்கள் அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

சிறுவர் துஷ்பிரயோகத்தை கையாள்வது, மூன்று செயல்முறைகள் மூலம் செய்யப்பட வேண்டும்.

சமூக நீதி, பாதுகாப்பு, பெற்றோர் மற்றும் குழந்தைகள் இருவருக்கும் கல்வி மற்றும் நல்ல சட்ட நிர்வாகம், சட்டதீர்வுகளை அமுல்படுத்துதல். பள்ளி பாடத்திட்டத்தில் பாலியல் கல்வியை அறிமுகப்படுத்துவது குறித்து, கல்வி அமைச்சுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருக்கின்றோம்.

நாங்கள் பார் அசோசியேஷனில் இருந்த போது, மாணவர்களுக்கு சட்டம் கற்பிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் வாதிட்டோம். O / L மற்றும் A / L மாணவர்களுக்கு சட்டத்தை ஒரு பாடமாக சேர்க்க கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல் சில பாலியல் கல்வி, குழந்தைகளுக்கு தேவைப்படுகிறது. அநேகமாக தரம் 6 முதல் அல்லது குறைந்தபட்சம் தொடங்குவதற்கு ஏதேனும் வழியுள்ளதா என்பது தொடர்பாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்” என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

### கொவிட் 19 அச்சம்

# பரீட்சை நிலையங்களில் முன்னேற்பாட்டு நடவடிக்கை

(கொழும்பு)

கொவிட் 19 தொற்று அச்சம் காரணமாக பரீட்சை நிலையங்களில் முன்னேற்பாட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய பரீட்சை நிலையங்களை அண்மித்த வைத்தியசாலைகளுடன் தொடர்பினை ஏற்படுத்தி சிகிச்சைகளை வழங்குவதற்காக அம்புலன்ஸ்களை தயார்படுத்தல் மற்றும் விடுதி வசதிகள் உள்ளிட்ட ஏனைய வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கல்வியமைச்சினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கல்விப்பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் மாதம் 12 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதற்கமைய நாடு முழுவதும் உள்ள இரண்டாயிரத்து 648 நிலையங்களில் குறித்த பரீட்சை இடம் பெறவுள்ளது. அத்துடன் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி நாடு முழுவதும் உள்ள இரண்டாயிரத்து தொளாயிரத்து 36 நிலையங்களில் இடம் பெறவுள்ளது. இந்த நிலையிலேயே முன்னேற்பாடு பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# 97 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 97 இலங்கையர்கள் நேற்று காலை நாடு திரும்பினர்.

அந்தவகையில் 73 பேர் கட்டாரில் இருந்தும், 24 பேர் அபுதாபியில் இருந்தும் விசேட விமானம் மூலம் நாடு திரும்பினர்.

நாட்டை வந்தடைந்த அவர்களுக்கு கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (2)

## இன்று ஒரு தகவல்

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# முட்டாள் ஜனங்கள்

ஒரு பெரிய நினைவு மண்டபம். அதற்கு முன்னால் ஒரு அப்பாவும் பிள்ளையும் நின்று கொண்டிருந்தார்கள். அந்த வழியாக போகின்றவர்கள்- வருகின்றவர்கள் எல்லாம் அந்த இடத்திலே நின்று அது என்ன மண்டபம் என்று விசாரிக்க ஆரம்பித்தார்கள். அந்த அப்பாவும் பிள்ளையும் தான், வருகின்றவர்களுக்கெல்லாம் விவரம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதாவது இந்த இடத்திலே ஒரு பெரிய மகான் சமாதி ஆகியிருக்கின்றார். அவர் சமாதி ஆன இடத்திலே இந்த நினைவு மண்டபத்தைக் கட்டியிருக்கின்றோம். அப்படி என்றார்கள். ஊர் முழுவதும் இதைத் தேடி வர ஆரம்பித்தார்கள். இங்கே வந்து கொஞ்ச நேரம் உட்கார்ந்து விட்டுப் போனால் மனதுக்கு ஒரு நிம்மதி கிடைக்கின்றது என்றார்கள்...

அங்கேயிருந்த உண்டியலில் நிறைய காசு போட்டுவிட்டுப் போனார்கள்.

பணம் கிடு-கிடு என்று நிறைய சேர ஆரம்பித்தது. பணம் நிறைய சேர்ந்தவுடன் அந்த அப்பாவுக்கும் பிள்ளைக்கும் தகராறு வந்துவிட்டது. பணம் சேர்ந்தாலே சொத்து தகராறு வரத்தானே செய்யும்.

பையன் அடிக்கடி நிறைய பணம் கேட்க ஆரம்பித்தான். அப்பா பார்த்தார், யோசித்தார். ஒரு முடிவுக்கு வந்தான். ஒரு நாள் பையனைக் கூப்பிட்டார்.

“இதோ பாருப்பா ...நமக்குள்ளே தகராறு வேண்டாம். அப்பாவும் பிள்ளையும் இப்படி சண்டை போட்டுக் கொண்டால் பார்ப்பவர்கள் தவறாக நினைப்பார்கள். அதனால் நமக்குள்ளே சமரசமாக இதைத் தீர்த்துக் கொள்வோம். என்ன சொல்கின்றாய்? ”என்றார் அப்பா.

சரி என்றான் பையன். உடனே அந்த அப்பா என்ன செய்தார். மகனிடம் கொஞ்சம் பணத்தைக் கொடுத்தார். தன்னிடம் இருந்த ஒரு கழுதையையும் கொடுத்தார். “ இதை வைத்து நீ பிழைத்துக் கொள் ”என்று சொல்லி அனுப்பி வைத்துவிட்டார்.

மகன் அந்தக் கழுதையை இழுத்துக் கொண்டு அடுத்த ஊருக்குப் போனான். வழியிலேயே அந்தக் கழுதை செத்துப் போய்விட்டது. உடனே என்ன செய்யலாம் என்று யோசித்தான். ஒரு ஐடியா செய்தான். அந்தக் கழுதையை ஒரு சாலை ஓரமாக புதைத்தான். கையில் இருந்த பணத்தை வைத்து அந்த இடத்திலே ஒரு கல் மண்டபம் கட்டினான்.

அந்த வழியாக இரண்டு பேர் வந்தார்கள். இது என்ன மண்டபம் என்று விசாரித்தார்கள்.“ இந்த இடத்திலே ஒரு பெரிய மகான் சமாதி ஆகியிருக்கின்றார். ” என்றான்.

இந்த செய்தி ஊர் பூராக பரவியது. நிறைய பேர் வந்து போக ஆரம்பித்தார்கள். “ இங்கே வந்தால் மனதிற்கு ஒரு நிம்மதி கிடைக்கின்றது” என்றார்கள். வர வர கூட்டம் அதிகமாக வர ஆரம்பித்தது. உண்டியலில் பணம் நிறைய சேர்ந்து விட்டது நகையெல்லாம் கூட கழட்டி காணிக்கையாக போட ஆரம்பித்தார்கள். அப்பாவை விட மகன் பெரிய ஆளாகிவிட்டான். இதைக் கேள்விப்பட்டார் அப்பா. பையனைப் பார்த்துவிட்டு வரலாம் என்று ஒரு நாள் புறப்பட்டு வந்தார் பையன் ஓகோ என்று இருந்தான். பங்களா-கார் எல்லாம் வந்துவிட்டது.

“ எப்படிடா இந்த அளவுக்கு ஆனாய் ? ” என்று கேட்டார்.

“ அப்பா எல்லாம் உங்கள் ஆசீர்வாதம் தான் அப்பா ! நீங்கள் கொடுத்த மூலதனைத்தை வைத்துத் தான் இவ்வளவும் சம்பாதித்தேன் ” என்றான் பிள்ளை. அது எப்படி என்று கேட்டார்

அப்பா ...நீங்கள் ஒரு கழுதைக்குட்டியும் கொஞ்சம் பணமும் என்னிடம் தந்து அனுப்பினீர்கள். அதை எடுத்துக் கொண்டு வந்தேன். வருகின்ற வழியிலே அந்தக் கழுதை செத்துப் போய்விட்டது. உடனே யோசனை செய்தேன். அந்தக் கழுதையை இந்த இடத்திலே புதைத்தேன். கையிலே இருந்த பணத்தை வைத்து மண்டபம் கட்டினேன். மகான் ஒருவர் சமாதியாகியிருக்கின்றார் என்று வதந்தியை கிளப்பி விட்டேன் ஜனங்கள் எல்லாம் ஏமாந்து போய் காசை கொண்டுவந்து கொட்டுகின்றார்கள். நான் பொழைத்துக் கொண்டிருக்கின்றேன் என்றான்.

இப்பொழுது தான்டா நீ என் பிள்ளை என்று சொல்லி சந்தோசப்பட்டார் அந்த அப்பா.

ஏன் அப்படி சொல்கின்றீர்கள் என்று கேட்டான் பையன்.

“கழுதைக் குட்டியை புதைத்து மண்டபம் கட்டியிருக்கின்றாய் நீ... ஏற்கனவே எங்கள் ஊரிலே நாம் கட்டியிருக்கின்றோமே.. மண்டபம் அது இந்த கழுதையுடைய அம்மாவை புதைத்த இடம். மகான் சமாதி ஆகியிருக்கின்றார் என்று நானும் சும்மா கப்ஸா தான் விட்டுக் கொண்டிருக்கின்றேன் என்றார் அப்பா.”

முட்டாள் ஜனங்களை நினைத்து அந்த இரண்டு பேரும் சத்தம் போட்டு சிரித்தார்களாம். ரஷ்யாவிலே நடந்த ஒரு நாடகத்தினுடைய கதை இது.

மனிதனை மனிதன் ஏமாற்றுவது மிகவும் சுலபம். என்னிடம் கூட படித்த ஒருவன் திடீர் என்று ஒரு நாள் எல்லோருக்கும் அருள் வாக்கு சொல்ல ஆரம்பித்துவிட்டான். அவன் அலுவலகத்தில் வேலை பார்க்கின்றான். அலுவலகத்திலே உள்ளவர்கள் எல்லாம் அவனிடம் வந்து அருள் வாக்கு கேட்பது வழக்கம். ஒரு நாள் நான் அவன் அலுவலகத்துக்குப் போய் அவனிடம் பேசிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அதே அலுவலகத்திலே வேலை பார்கின்ற ஒருவர் அவனிடம் வந்து,“ சுவாமி, என் மேசையிலே வைத்திருந்த பேனா திடீர் என்று காணாமல் போய்விட்டது. அது திரும்பக் கிடைக்குமா ”என்றான்.

இவன் கண்ணை உருட்டிப் பார்த்துவிட்டு அது கிடைக்காது புதிதாக வேறு வாங்கிக்கொள் என்றான். சரி என்று அவர் போய்விட்டார்.

அவர் போனதும் நான் மெதுவாக இவனைப் பார்த்து. அது எப்படி ..அது எனக்குக் கிடைக்காது என்று அவ்வளவு உறுதியாக அவரிடம் சொன்னாய்? என்று கேட்டேன். இவன் மெதுவாக என் காதிடம் வந்து.. அந்தப் பேனாவை எடுத்ததே நான் தான் என்றான்.

# 13 பிளஸ் நாட்டை பிளவுபடுத்தும் விடயமல்ல

## நாமல் ராஜபக்ஷவுக்கு தெளிவுபடுத்திய சாணக்கியன்

(கொழும்பு)

**13 பிளஸ் என்பது நாட்டை பிளவுபடுத்தும் விடயமல்ல என தொடர்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் கூறினார். அவர் நாட்டை பிளவுபடுத்தும் விடயங்களை கூறுவாரென நான் நினைக் கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித் துள்ளார்.**



ஜனநாயகத்திற்கான இளைஞர் என்ற தலைப்பில் தேர்தல் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய, தேர்தல்கள் ஆணைக் குழுவின் உறுப்பினரான பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட இரா.சாணக்கியன், 'பொருளாதாரம், வேலை வாய்ப்பு மற்றும் வீட்டுத்திட்ட பிரச்சினை என்பன அனைத்து இலங்கை இளைஞர்களுக்கும் இருக்கும் பாரிய பிரச்சினை. 30 வருட கால யுத்தம் இருந்தமையினால் தெற்கைவிட 10 வீதம் அதிகளவான பிரச்சினைகள் வட, கிழக்கில் இருக்கின்றன.

அரசியல் ரீதியான நல்லிணக்க பிரச்சினைக்கு பொருளாதார ரீதியிலான தீர்வை கொடுப்பதாயின் நீண்டகாலத்திற்கு முன்னரே அந்த பிரச்சினைக்கான தீர்வை வழங்கியருக்க முடியும்.

காலஞ்சென்ற சௌமிய மூர்த்தி தொண்டமானுடைய காலத்தில் பொருளாதார பிரச்சினைகளுக்கு முன்னுரிமை வழங்கியிருந்தால் மலையகத்திலுள்ளவர்களுக்கு இன்று வரை வாக்குரிமைகூட இல்லாதிருந்திருக்கும்.

ஆகவே, இந்த நாட்டிலுள்ள தமிழ் இளைஞர்களின் அதிகளவான பிரச்சினைகளுக்கும் யுத்தத்தினால் ஏற்பட்ட பிரச்சினைகளுக்குமான தீர்வை புதிய அரசியலமைப்பின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியுமென்பதால் இந்த நாட்டுக்கு புதிய அரசியலமைப்பு தேவையென்றே நான் கூறுவேன்.

1978 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பின் முக்கியஸ்தர்கள் மரணித்துள்ள போதிலும் அதனால் ஏற்பட்ட பிரச்சினைகளை நாங்களே எதிர்க்கொள்கின்றோம்.

19 ஆவது திருத்தத்தினால் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வாக 20 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டாலும் அவசர அவசரமாக 20 ஐ கொண்டு வராது புதிய அரசியலமைப்பை கொண்டு வருவது பொருத்தமானதாகும்.

இதேவேளை, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது 13 பிளஸ் என்பதன் ஊடாக இந்த நாட்டிலுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமெனக் கூறியிருந்தார்.

13 பிளஸ் என்பது நான் கூறியதல்ல. அது பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் கூறியதாகும். ஆகவே, அவர் நாட்டை பிளவுப்படுத்தும் விடயங்களைக் கூறுவாரென நான் நினைக்கவில்லை.

13 பிளஸ் என்பது நாட்டை பிளவுபடுத்தும் விடயமல்ல. நாட்டிலுள்ள அரசியலமைப்பிலுள்ள விடயங்கள் என்பதால் அதனை மேலும் பலப்படுத்துமாறே நாங்கள் வலியுறுத்துகின்றோம்" என தெரிவித்துள்ளார். (ஜ-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: சூரி,செவ் 12 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: HNDA, தனியார் முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11235 | பிறப்பு: 1994 கிறிஸ்தவம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. அரச மருந்தாளர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் உள்ள மணமகன்.<br>தொ.இ: G/11294 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: **Civil Engineering,** தனியார் கல்வி நிலைய இயக்குநர்<br>எதிர்பார்ப்பு: தனியார் அரச உத்தியோகமுள்ள பெண்.<br>தொ.இ: B/11236 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: செவ் 11 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த.<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டு மணமகன்<br>தொ.இ: G/11297 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை<br>கி.பா: சூரி,செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. பிரான்ஸில் வேலை செய்கின்றார்<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டுப் பெண்<br>தொ.இ: B/11238 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: 40 செவ் 4 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: **Diploma in Dental Theraphy. Dental Therapist Gov.**<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர்<br>தொ.இ: G/11300 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 57 சூரி, செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BA, B.Sc (Canada), கனடாவில் வேலை செய்கின்றார்<br>எதிர்பார்ப்பு: ஆங்கிலம் பேசத் தெரிந்த பெண்<br>தொ.இ: B/11239 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: 58 ¼ செவ் 4 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. அழகுக்கலை நிபுணர்.<br>எதிர்பார்ப்பு:வெளிநாட்டு மணமகன் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/6034 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**


# கண்டியில் உயிர்களைக் காவு கொண்ட கட்டட உரிமையாளர் கைது

(கண்டி)

கண்டி - பூவெலிகடை பகுதியில் 5 மாடிக் கட்டடம் இடிந்து வீழ்ந்தமை தொடர்பாக குறித்த கட்டடத்தின் உரிமையாளர் அனுர லெவ்கே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுவரையில் உரிய முறையில் விசாரணைகள் இடம்பெறவில்லை என சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்களும் பிரதேசவாசிகளும் குற்றம் சுமத்தியிருந்த நிலையிலேயே, தற்போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பூவெலிகடை பகுதியில் கடந்த 20 ஆம் திகதி காலை 5 மாடிக் கட்டடமொன்று இடிந்து, அருகில் இருந்த வீட்டின் மீது விழுந்தது.

இந்த விபத்தில் குறித்த வீட்டில் இருந்த தாய், தந்தை மற்றும் கைக்குழந்தையும உயிரிழந்தனர். மேலும் இருவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

அத்துடன் இந்தசம்பவம் தொடர்பாக தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# நல்லாட்சி என்கின்ற தவறிலிருந்து நாம் நாட்டைக் காத்துள்ளோம்

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம், நாட்டை பாரிய அழிவு நிலைமையிலிருந்து காப்பாற்றியுள்ளதாக கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2015 ஆம் ஆண்டில் மிகவும் பிழையான முறையிலும் சதித் திட்டத்தின் ஊடாகவும் நாட்டின் ஆட்சி பலத்தை பெற்றார்கள்.

என்றுமே மக்களின் வாக்குகளினால் நிறைவேற்று அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத முன்னாள் பிரதமர் ரணில் அரசியலமைப்பு சதித் திட்டமொன்றை மேற்கொண்டு நான்கரை வருடங்கள் நிறைவடையும் வரை பாராளுமன்றமொன்றை கலைக்க முடியாத வகையில் மக்களின் இறைமையை மீறிச் செயற்பட்டார்.

கடந்த கால ஆணைக் குழுக்களின் விடயங்களை ஆய்வு செய்து பார்க்கும் போது குறிப்பாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவிலிருந்து



வெளியாகின்ற காரணிகள் தொடர்பில் பார்க்கும் போது. நாம் மிகவும் அதிர்ஷ்டவசமாக நாட்டை பாரிய அழிவிலிருந்தும் பயங்கரமான நிலைமையிலிருந்தும் காப்பாற்றுவதற்கு வந்துள்ளோம்" என பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே குறிப்பிட்டார். (ஜ-4)

# கடல் புறா

## அசைந்த திரை! அஞ்சன விழிகள்!

"என்ன அக்கிரமம்! சாதாரண மக்களையெல்லாம் ஒற்றர்களாக எண்ணுகிறானா பீமன்?" என்று சீறிய இளைய பல்லவனின் குரலில் அதிகக் கொந்தளிப்பு தெரிந்தது.




அந்தக் கொந்தளிப்பைக் கவனிக்காத சுங்க அதிகாரி மேலும் தன் சாமர்த்தியத்தைக் காட்டி, "அது மட்டுமல்ல..." என்று ஆரம்பித்தான்.

"எது மட்டுமல்ல?" என்று மீண்டும் சீறினான் இளைய பல்லவன்.

"இரவில் தமிழர் யாரும் ஊரில் நடமாட அனுமதிக்கப்படுவதில்லை. அது மட்டுமல்ல..."

இந்த "அது மட்டுமல்ல" பெரும் கசப்பாயிருந்ததால் முகத்தைச் சுளித்தான் கருநாகர பல்லவன். "ஒவ்வொன்றாகச் சொல்ல வேண்டாம் முழுவதையும் ஒரே அடியாகச் சொல்லித் தொலையும்!" என்று எரிந்தும் விழுந்தான். அந்த முகச் சுளிப்பையும் எரிச்சலையும் கொந்தளிப்பாக அடிக்கப் பெரும் கொள்ளியை இளைய பல்லவனின் உணர்ச்சிகளில் செருகினான் சுங்க அதிகாரி. "அது மட்டுமல்ல இளைய பல்லவரே! சோழ வம்ச இளவலும் நேற்றுச் சிறை செய்யப்பட்டிருக்கிறார்" என்று அக்கம் பக்கம் பார்த்து மிக மெதுவான குரலில் கூறினான்.

"யாரது?" எரிமலை குமுறும் குரலில் எழுந்தது இளைய பல்லவனின் கேள்வி.

"அம்மங்காதேவியின் மகன்! ராஜராஜநரேந்திரன் செல்வன்!" என்றான் சுங்க அதிகாரி.

எரிமலை திடீரென வெடித்தது. "அத்தனை துணிவா கலிங்கத்துப் பீமனுக்கு?" என்று கோபம் கொந்தளிக்க குரலில் கனல் பொறிகள் சிதறக் கூவினான் கருணாகர பல்லவன். அதைக் கேட்டுத் திகைத்துப்போன சுங்க அதிகாரி, சுய நிலை அடையும் முன்பாக, வாள் தாங்கிய காவல் வீரரிருவர் இளைய பல்லவனை அணுகிவிட்டதால், மேற்கொண்டு என்ன செய்வது என்பதை அறியாமல் தத்தளித்தான் சுங்க அதிகாரி. நிதானத்தைத் தான் இழந்து விட்டதால் நிலைமை மீறிவிட்டதை உணர்ந்த கருணாகர பல்லவன் மின்னல் வேகத்தில் தன் வாளை உருவிக் காவல் வீரர் இருவரின் வாள்களையும் சரேலெனத் தடுத்தான்.

அதேநேரத் தில், கச்சையில் வயிற்றுக்கு நேரேயிருந்த தன் குறுவாளை எடுத்து ஒரு காவலன் வயிற்றில் பாய்ச்சிக் கொண்டே அகலமான தன் பெருவாளை மற்றொரு வீரன் கழுத்தில் பாய்ச்சினான்.

மின்னல் வேகத்தில் நிகழ்ந்து விட்ட அந்த விபரீதத்தாலும் காவலரிருவர் திடீரெனத் தரையில் சாய்ந்து விட்டதாலும், அடுத்த விநாடி அந்தப் பெரும் சுங்க மண்டபம் அமளி துமளிப்பட்டது. கண்ணிமைக்கும் நேரத்தில் இரு காவல் வீரரை வானுலகுக்கு அனுப்பிய கருணாகர பல்லவனைச் சூழ மற்றும் சில வீரர் விரைந்தாலும் அவர்கள் சூழ்வதற்கு முன்பே வணிகர்களிடம் அச்சம் ஏற்பட்டு அவர்கள் சரக்குகளைக் காப்பாற்றப் பெரும் கோஷத்தைக் கிளப்பி அங்குமிங்கும் ஓடியதால் காவலர், வணிகர், அடிமைகள் இவர்கள் கலந்து போய்விட்டதாலும், இந்தக் குழப்பத்தில் ஓரிரு பந்தங்களும் தளைகளிலிருந்து கீழே விழுந்துவிட்டதாலும் நிலைமையை நன்றாகப் பயன்படுத்திக் கொண்ட கருணாகரன் திடீரென வர்த்தகர்களுக்கிடையே பதுங்கி மறைந்து ஓரமாக ஒதுங்கி ஒதுங்கி வெளியே வந்து தன் புரவியை அவிழ்த்து ஏறப் போனவனை, கையைப் பிடித்துத் தடுத்த சுங்க அதிகாரி, "வேண்டாம், புரவியை நான் பார்த்துக்கொள்கிறேன். இப்படி வாருங்கள்" என்று சுங்கச் சாவடியின் மறைவிடமொன்றுக்கு அழைத்துச் சென்று, "இந்தாருங்கள், இந்த மேலங்கியால் உங்களை நன்றாக மறைத்துக் கொள்ளுங்கள். இது அராபியர் உடை, தலையில் இருந்து கால் வரைக்கும் மறைக்கும். அதோ போகும் அராபியர் வணிகர் கூட்டத்துடன் கலந்து ஊருக்குள் நுழையுங்கள். கூலவாணிகள்

விடுதிக்குப் பிறகு செல்லலாம். ஊருக்குள் நுழையுங்கள். நுழைந்ததும் வெளிநாட்டு வணிகர் தங்கும் பெரும் வீதிக்குள் சென்றால் அங்கு தங்க இடமும் இருக்கிறது. தமிழரை அந்த இடத்தில் யாரும் தேடவும் மாட்டார்கள். அங்கு இருங்கள். பிறகு சந்திக்கிறேன்" என்று கூறிவிட்டு, அராபியர் அங்கியொன்றையும் அளித்துவிட்டுப் பழையபடி சுங்கச் சாவடியிருந்த கட்டடத்துக்குள் நுழைந்தான்.

சுங்க அதிகாரியின் சொற்களை நன்றாக மனதில் பதித்துக் கொண்ட கருணாகர பல்லவன், அடுத்த விநாடி அங்கு நிற்காமல் பலூர் பெருந்துறையின் கோட்டை வாயிலுக்குச் செல்லும் அராபியர் கூட்டங்களுடன் கலந்து சென்றான். கோட்டைக் காவலர்கள் ஒவ்வொருவரையும் தனிப் படப் பரிசோதனை செய்தே உள்ளே அனுமதித்தார்கள். கருணாகர பல்லவன் வாயிலை அணுகியதும் திடீரெனத் தலை கவிழ்ந்து, ஏற்கனவே சோதனை செய்யப்பட்ட அராபிய வணிகன் ஒருவனது மூட்டையை எடுத்துக் கொண்டு அவனைத் தொடர முற்பட்டான். காவலன் முதலில் அவனைப் போக அனுமதித்து விட்டாலும், கால் புறத்தில் சற்றே தூக்கியிருந்த அவன் மேலங்கியிலிருந்து தலை நீட்டிய வாளின் நுனியைப் பார்த்ததும், "ஏய்! வா! இப்படி!" என்று அழைத்தான்.

கருணாகரப் பல்லவன் திடீரென அங்கியைக் கழற்றிக் காவலன் முகத்தில் எறிந்ததன்றி, அடுத்த விநாடி தன்னைச் சூழ்ந்துகொண்ட நாலைந்து காவலரைத் தன் வாள் வீச்சினால் விலக்கிக்கொண்டு ஓரிருவரை வெட்டிப் போட்டுவிட்டு, அந்தப் பெரும் துறைமுக வீதிகளில் எங்கு போகிறோம் என்பதை அறியாமல் ஓடினான். அவனைத் தொடர்ந்து பத்துப் பதினைந்து காவலரும் விரைந்தனர்.

பாலெனக் காய்ந்துகொண்டிருந்த அந்த வெண்ணிலவில் பாலூர் பெருநகரத்தின் நடுப்பகுதி வெள்ளை வெளேரென்றும் வீடுகளின் தாழ்வாரங்களில் நிழலடித்தும் பக்கப் பகுதிகள் கரேலென்று இருட்டாகவும் தெரிந்ததால், அந்த நகரம் இருளும் ஒளியும் நன்மையையும் தீமையும் கலந்த மனித இதயம்போல் காட்சியளித்தது. வீரர்கள் கண்களில் படாமல் இருள் அடித்த பகுதிகளிலேயே ஓடினாலும், வீரர்கள் அவன் காலடி ஒலியைக் கொண்டே அவனைத் துரத்திச் சென்றார்கள். எந்த விநாடியும் தான் அகப்பட்டுக் கொள்ளலாம் என்பதைக் கண்டதும் என்ன செய்வதென்பதை அறியாமல் திடீரெனப் பக்கத்திலிருந்த மாளிகைத் தாழ்வாரத்தில் பதுங்கினான். பிறகு மெல்ல மெல்ல இருளடித்துக் கிடந்த மாடிக் கூரைப் பகுதி மீது தொற்றி ஏறவும் தொடங்கினான்.

அந்தப் பல அடுக்கு மாளிகையின் சுவர்களில் நீண்டிருந்த கைப்பிடிகளைப் பிடித்த வண்ணம் அபாய நிலையில் நடந்து நடந்து தொற்றி ஏறி, இரண்டாவது அடுக்கின் தாழ்வரையை அடைந்த இளைய பல்லவன், கீழே கருமையுடன் தெரிந்த அதலபாதாளத்தையும், தான் பிடித்திருந்த மெல்லிய தாழ்வரைச் சுவரையும் பார்த்து, பிடி சிறிது பிசகினாலும் மரணம் நிச்சயம் என்பதை உணர்ந்து கொண்டான். இருப்பினும் மிகுந்து எச்சரிக்கையுடன் நடந்து ஒரு மூலைக்கு வந்ததும், அடுத்து ஒரு சாளரமிருப்பதைக் கண்டு, அந்தச் சாளரத்தை எட்டிப் பிடித்து வெகு லாவகமாகத் தன் உடலை அதில் சாய்த்து ஓசைபடாமல் அங்கிருந்த அறைக்குள் குதித்தான்.

அறையில் யாருமில்லாதது பெரும் ஆறுதலாயிருந்தது இளைய பல்லவனுக்கு. அறையிலிருந்த சிறு விளக்குக்கூட மங்கலான ஒளியைத்தான் பரப்பியது. அந்த மங்கலான ஒளியிலிருந்தும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள எண்ணிய கருணாகர பல்லவன், அந்த அறையின் ஓரத்தில் ஒரு திரையிருந்ததைக் கவனித்து, அடிமேல் அடி வைத்து, ஓசைபடாமல் அதை அணுகி, அதற்குப் பின்னால் ஒளிந்து கொண்டான். எதிர்பாராத விதமாக யாராவது அறைக்குள் வந்தால் தன்னைக் காத்துக்கொள்ள, வாளை உறையில் போடாமல் கையில் பிடித்தவண்ணம் அசையாமல் திரை மறைவில் நின்றான்.

சில நிமிடங்களுக்கு எல்லாம் அந்த அறைக்குள் ஓர் உருவம் நுழையத்தான் செய்தது. ஆனால் அதைக் கண்டதும் இவன் வீரமெல்லாம் எங்கோ பறந்தது. வாள் பிடித்த அவன் கை வெலவெலத்தது. உறுதியான அவன் கால்களும் உதறத் தொடங்கின. அந்த உருவம் நுழைந்த சில விநாடிகளுக்குள்ளேயே பெருத்த சங்கடத்தில் சிக்கித் திணறினான் அந்த மாவீரன். அவன் உணர்ச்சிகளை அப்படி ஆட்டி வைக்க உள்ளே நுழைந்தது ஒரு பெண் உருவம். ஏதோ பஞ்சின்மேல் நடப்பது போல் மெல்லடி வைத்து அறையில் நுழைந்தது அந்த மோகன பிம்பம். அதுவும் முன்னாடை களைந்து மறு ஆடை உடுக்க வந்தது. அறைக்குள் நுழைந்ததும் கதவைத் தாழிட்டு முன்னாடையை மெல்ல மெல்லக் களையவும் முற்பட்டாள் அந்த மோகனாங்கி. நெறியினின்று சிறிதும் பிறழாத குலத்தில் வந்த இளைய பல்லவன் தன் கண்களை இறுக மூடிக்கொண்டான். பயத்தால் திரைச்சீலையைச் சிறிது இறுக்கியும் பிடித்தான். அப்படி அவன் பிடித்ததால் அசைந்த அந்தத் திரைச்சீலையை அந்த ஏந்திழையின் அஞ்சன விழிகள் திடீரென ஏறெடுத்து நோக்கின.

தொடரும்...

# ஈழத்தமிழினத்தை காவல் செய்ய காத்தற் கடவுளே மாயவா தேரேறிவா

அவன் அருளால் அவன் தாழ் வணங்கி மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று அங்கங்களிலாலும் பெருஞ்சிறப்புப் பெற்றது துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் திருத்தலமாகும். இவ் வல்லிபுரத்திலெழுந்தருளியிருக்கும் திருமாலுக்கு "ஆழ்வார்" என்ற திருநாமமே பன்னெடுங்காலமாக வழங்கப்பட்டு வருகின்றது. இவ் ஆலயத்தின் பிரபாவம் தட்சண கைலாச புராணம், தட்சண கைலாச மாண்மியம் (வல்லிபுரவைபவம்) நகுல மலைக் குறவஞ்சி, திருக்கேதீஸ்வர புராணம் என்னும் நூல்களில் பெரிதும் பேசப்பட்டுள்ளது. இன்னும் சிங்கள மொழியிலுள்ள "கோகுல சந்தேச" என்னும் பிரபந்தத்தில் வல்லிபுரம், பொன்னாலை பற்றிய செய்திகள் மிக விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ளன.



## வல்லிபுரமே சிங்கை நகரமாக விளங்கியது

வல்லிபுரக் கோயிலைச் சூழவுள்ள மணற்பகுதிகள் புராதன காலத்தில் மிக உன்னத நிலையிலிருந்த ஓர் இராசதானி என்பது ஆய்வாளர் பலருடைய கருத்தாகும். "வல்லிபுரம் ஓர் துறைமுகமாக இருந்தது மட்டுமன்றி தலைநகராகவும் இருந்தது என்பதற்கான புதை பொருட் சின்னங்கள் கவனத்துக்குரியதாகும். கி.பி-8 ஆம் நூற்றாண்டில் கலிங்க அரசன், உக்கிரசிங்கன் கதிரமலையரசை கைப்பற்றி மாருதப்புர வீக வல்லியென்னும் சோழகுமாரியை மணந்து பின்னர் கதிரை மலையை விட்டு நீங்கி சிங்கை நகரை இராசதானியாக்கினான்.

பருத்தித்துறைக்கு அண்மையில் மணல் மேடுகள் உள்ள வல்லிபுரமே சிங்கை நகரமாகப் பண்டைக் காலத்தில் விளங்கியது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடகீழ்ப் பகுதியை அண்டிய கடற்கரையைத் தனது தீர்த்தக் கரையாகக் கொண்டு விளங்குவது இவ்வாலயமாகும்.

## சுதர்சனமே விஷ்ணு விஷ்ணுவே சுதர்சனம்

சுதர்சனமே விஷ்ணு ஆகும். விஷ்ணுவே சுதர்சனமாகும். சுதர்சனமானது மூலஸ்தானத்தில் காட்சியளிக்கின்றது. அரங்கனாக விளங்குகின்ற கிருஷ்ண பரமாத்மாவின் கையிலிருப்பது தான் இந்த சுதர்சனம். தர்மத்தின் முடிந்த பயன் இன்பம் அல்லவா? அதர்மத்தின் முடிந்த பயன் துன்பமல்லவா? கண்ணன் உயிர்களைக் காக்கும் கடவுள். இந்த தர்மசக்கரத்தைக் கொண்டு அவன் அனைத்தையும் காத்து வருகின்றான். அறம் செய்பவர்களை ஆழி காப்பாற்றுகின்றது. கேடு செய்கின்றவர்களை அது துன்புறுத்துகின்றது. சக்கரத்துக்கு மறைந்திருந்து யாரும் எச் செயலையும் செய்ய முடியாது. இத்தனை காவல் தெய்வ திருவடியாக சக்கரம் சக்கரத்தாழ்வாராக வழிபடப்படுகின்றது.

குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித் தென்
திசை பாதம் இலங்கை நோக்கி

கடல் நிறக் கடவுளெந்தை
யரவணைத் துயிலுமா கண்டு
உடலெனக் குருகுமாலோ என்
செய்கேனுலகத் தீரே.

## ஆழ்வாரின் பாடலில் இலங்கை

தொண்டரடிப் பொடியாழ்வார் "தென் திசை இலங்கை நோக்கி" என அரங்கனை பாடிய பாடலில் எமது ஈழமணித்திருநாடு இடம்பிடித்திருப்பது யாவரும் அறிந்ததே.

இத்துடன் உலகில் எங்குமே இல்லாதவாறு வல்லிபுரத்தில் விஷ்ணு ஆலயத்தில் "சங்க ராயுதம்" மூலமூர்த்தியாக எழுந்தருளி அருள்பாலிப்பது தனித்துவமான சிறப்பு

## "தேரேறும் மாயவன்"

தேர்விழா காட்சியில் இணைந்து வழிபடும் அன்பர்களுக்கு நல்ல வரமருள கோவிந்தனாக, கோபாலனாக வல்லிபுரத்தில் தேரேறி வருகிறான்.

காத்தல் கடவுளே ஈழத் தமிழினத்தை காவல் செய்திட தேரேறி வாவென அரங்கனின் கழல் தொழுவோம் வாரீர்!

மதுரகவி.
காரை.எம்.பி.அருளானந்தன்.

# பாடசாலை சீருடைகளை உள்நாட்டில் உற்பத்தி செய்வது தொடர்பாக ஜனாதிபதி ஆராய்வு

(கொழும்பு)

பாடசாலை சீருடை மற்றும் பாதுகாப்பு படை அதிகாரிகளுக்கான சீருடை ஆகியவற்றைத் தயாரிக்கும் நடவடிக்கையில் பெருமளவான வீதத்தை உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி ஆராய்ந்து வருகின்றார்.

இவற்றைத் தயாரிப்பதற்கான பொருட்களை உள்நாட்டிலே உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பை அண்மித்த பகுதிகளிலுள்ள ஆடை உற்பத்தி நிறுவனங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் திங்கட்கிழமை சென்று பார்வையிட்டிருந்தார்.

இது தொடர்பில் விடுத்துள்ள ஜனாதிபதி ஊடக அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது. பாடசாலை சீருடைக்கான கூப்பன் முறைமை அமுல்படுத்தப்பட்டதன் காரணமாக பெரிய அளவிலான மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்ட துணி உற்பத்தி நிறுவனங்கள் பல மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டதாக உற்பத்தியாளர்கள் இதன் போது ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.



அத்துடன் பெருமளவானவர்கள் தொழிலை இழக்க நேரிட்டுள்ளதெனவும் ஜனாதிபதியிடம் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை, உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பதன் ஊடாக இறக்குமதி செலவில் 68 வீதத்தினை மீதப்படுத்த முடியும் என ஜனாதிபதி உற்பத்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மேலும், உள்ளூர் உற்பத்திகளை வாங்குவதன் மூலம் கல்வி அமைச்சினால் ஆண்டுக்கு 80 மில்லியன் ரூபாய் பணத்தை சேமிக்க முடியுமென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# சபாநாயகரை சந்தித்த பிரித்தானிய தூதுவர்



(கொழும்பு)

பிரித்தானியாவின் இலங்கைக்கான தூதுவர் சாரா ஹல்டன், சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

குறித்த சந்திப்பு நேற்று முன்தினம் திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்றுள்ளது. இச்சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்கவும் கலந்துகொண்டார்.

இரு தரப்பு கலந்துரையாடலின் பின்னர் உயர்ஸ்தானிகருக்கு சபாநாயகர் தேநீர் விருந்துபசாரமொன்றையும் வழங்கினார். ()

# முதன்முறையாக வெற்றிகரமாக பிறந்த செயற்கை கருவூட்டல் ஆட்டுக்குட்டிகள்

(கொழும்பு)

நாட்டில் முதன் முறையாக செயற்கை கருவூட்டல் மூலம் ஆட்டுக்குட்டிகள் பிறந்துள்ளன.

செயற்கை கருவூட்டல் மூலம் வெற்றிகரமாக ஆட்டுக்குட்டிகள் பிறந்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

அதற்கமைய ஆரோக்கியமான முறையில் மூன்று செயற்கை ஆட்டுக்குட்டிகள் பிறந்துள்ளன.

தேசிய கால்நடை மேம்பாட்டு திணைக்களத்தின் மாதம்பே - ஹொரகெலே பண்ணையில் இந்த மூன்று ஆட்டுக்குட்டிகளும் பிறந்துள்ளன. (ஜ-4)

# கொவிட்-19 கட்டுப்படுத்தல் நடவடிக்கை; இரண்டாம் இடத்தை பிடித்த இலங்கை

## ஒத்துழைத்த அனைவருக்கும் ஜனாதிபதி வாழ்த்து



(கொழும்பு)

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் இலங்கை சர்வதேச ரீதியில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளமைக்கு ஜனாதிபதி கேட்டாபய ராஜபக்ஷ தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கேட்டாபய ராஜபக்ஷ தமது பேஸ்புக் சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவொன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சீனாவில் Yicai Global நிறுவனம் நடத்திய ஆய்வு அறிக்கையின்படி, கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தல், பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கை இரண்டாவது இடத்தில் காணப்படுகின்றது.

இதன்படி, நாட்டின் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் பிற துறைகளில் முறையான வள மேலாண்மை மற்றும் அர்ப்பணிப்பு மூலம் கிடைக்கப்பெற்ற இந்த சாதனைக்கு அதிகாரிகள் மற்றும் நாட்டு மக்கள் அனைவருக்கும் தமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாகவும் குறித்த பதிவில் தெரிவித்துள்ளார். (2)

# சம்பிக்கவுக்கு பயணத்தடை



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட மூவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் பயணத் தடை விதித்துள்ளது.

இவ்வாறு பயணத் தடை விதிக்கப்பட்டவர்களுக்கு புதிய கடவுச் சீட்டுக்களை விநியோகிக்க வேண்டாம் எனவும் கொழும்பு மேல் நீதிமன்றம் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு அறிவித்துள்ளது.

2016 ஆம் ஆண்டில் சம்பிக்க ரணவக்கவின் வாகனம் விபத்தினை ஏற்படுத்தியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணை நேற்றைய தினம் கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த வழக்கில் இரண்டாம் குற்றவாளியாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சம்பிக்க ரணவக்கவின் சாரதியான திலும் துஷித குமார என்பவரை கைது செய்யவும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# மண்சரிவு அபாய எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் சில பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் மக்கள் பாதுகாப்புடன் இருக்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளனர். அந்த வகையில் இரத்தினபுரி - குருவிட்ட பிரதேசத்திற்கும் கேகாலை - தெஹியோவிட்ட பிரதேசத்திற்குமே இவ்வாறு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)



# பற்களை இழந்தவர்களுக்கு இலவச பல் கட்டும் திட்டம்

(கொழும்பு)

பற்களை இழந்த மக்களுக்கு இலவச பல் வழங்கும் திட்டத்தை தொடங்க சுகாதார அமைச்சகம் கவனம் செலுத்துகிறது.

சுகாதார அமைச்சகம் நடத்திய ஆய்வொன்றில் 65 வயதுக்கு மேற்பட்டவர்களில் 20 சதவீதத்துக்கும் அதிகமானோருக்கு வாயில் பல் இல்லை என்பது தெரிய வந்துள்ளது.

தற்போது அரசு வைத்தியசாலைகளில் பல் கட்டும் திட்டம் இல்லை, பற்கள் இல்லாதவர்கள் பல் கட்டுவதற்காக தனியார் துறையை நாடுகின்றனர். இதற்கு நிறையப்பணம் செலவழிக்க வேண்டியுள்ளது,

இதன் காரணமாக பற்களை இலவசமாக வழங்குவதற்கான முன்மொழிவு செய்யப்பட்டதாக அரச பல் அறுவை சிகிச்சை சங்கத்தின் செயலாளர் டாக்டர் விபுலா விக்ரமசிங்க தெரிவித்தார். (ஐ-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2130

### தர்சன்

கடந்த காலத்தை மறந்து விடுங்கள்...முடிந்தது முடிந்தவையாக இருக்கட்டும்... நிகழ்காலத்தில் வாழுங்கள்... மகிழ்ச்சியும் மன அமைதியும் தானாக வரும்.!!

### தருண்

ஒவ்வொரு நாளின் தொடக்கத்திலும் ஒரு எதிர்பார்ப்பு! ஆனால் ஒவ்வொரு நாளின் முடிவிலும் ஒரு அனுபவம்...! இதுதான் வாழ்க்கை..!



### வானுசா

வெற்றியோ, தோல்வியோ எதுவாயினும் கடமையைச் செய்வோம்... யார் பாராட்டினாலும், பாராட்டா விட்டாலும் கவலை வேண்டாம்... நமது திறமையும், நேர்மையும் வெளியாகும் போது பகைவனும் நம்மை மதிக்கத் தொடங்குவான்..!

### சுமதி

எப்ப நமக்காக நாம வாழ பழக்கிறோமோ அப்போ தான் நாம எதிர்பார்த்த எல்லாமே எதிர்பார்க்காமல் நமக்கு கிடைக்கும்



### ரட்ணம்



வாழ்க்கை என்பது புத்தகம் போல அதில் முதல் பக்கம் கருவறை கடைசி பக்கம் கல்லறை இடையில் உள்ள பக்கங்களை கண்ணீரால் வாசிக்காதே புன்னகையால் வாசி..!


### பிருந்தாஸ்



ஊரடங்கு பிறப்பித்தவுடன் நாம் ஓடிச் சென்று வாங்கியது அரிசி, பருப்பு, காய்கறி தானே தவிரத் தங்கம், வெள்ளி போன்ற ஆபரணம் அல்ல, இனியாவது உணவின் அருமை உணர்வோம்! அதை விதைப்பவனின் பெருமை அறிவோம்!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நியூ டயமண்ட் கப்பலின் எண்ணெய் கசிவு கடல்வாழ் உயிரினங்களுக்கு அச்சுறுத்தல்



(கொழும்பு)

நியூடயமண்ட் கப்பலில் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டதால், கப்பல் காணப்பட்ட இடத்தை அண்மித்த பகுதியில் உள்ள கடலாமைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக நாரா நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த பகுதிகளிலுள்ள கடலாமைகளின் செயற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை தமது குழுவினர் அவதானித்துள்ளதாகவும் நாரா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

எண்ணெய்க் கசிவினால் கடலாமைகள் உள்ளிட்ட சில கடல்வாழ் உயிரினங்களுக்கு சிறியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

கப்பல் காணப்பட்ட கடற்பகுதியில் எண்ணெய் படலத்தின் தரச்சுட்டியும் அதிகரித்துள்ளதாக நாரா நிறுவனம் கூறியுள்ளது.

இதனால், கடல்வாழ் உயிரினங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பில் முழுமையான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


இந்த ஆய்வுகளின் அறிக்கையை எதிர்வரும் 2 வாரங்களுக்குள் சட்ட மா அதிபரிடம் கையளிக்க எதிர்பார்ப்பதாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

குறித்த கப்பலை நாட்டின் கடல் எல்லையிலிருந்து நகர்த்தும் வரை, இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை கடல் பகுதியின் நிலை குறித்து ஆராயப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் பின்னர் மாதம் ஒரு தடவை குறித்த கடல் பிராந்தியம் ஆய்வுக்குட்படுத்தப்படும் என கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

கப்பல் காணப்படும் கடல் பகுதியிலுள்ள மீன்கள் உள்ளிட்ட உயிரினங்களின் செயற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படும் பட்சத்தில் அது குறித்து தங்களுக்கும் நாரா நிறுவனத்திற்கும் அறியப்படுத்துமாறு கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை, மீனவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.(2)

## ஆன்மீகம்



# இறைவன் என்னும் இரகசிய கமரா!

*(சென்ற வார தொடர்ச்சி)*

*இல்லை! அவன் மனசாட்சிதான் அவனைத் தடுத்தது. 'நம்பிக்கை துரோகம் செய்யாதே! நயவஞ்சகனாக மாறாதே!' என்றது அவனுடைய மனசாட்சி. இருட்டிலும் தனிமையிலும் ஒருவனைப் பாவம் புரியவிடாமல் பத்திரப்படுத்துவது அவனவனின் மனசாட்சிதான். மனசாட்சியை மரணிக்கச் செய்து விட்டு பதவி ஏற்பு உறுதி மொழிகளையும், ரகசிய காப்பு பிரமாணங்களையும் வெறும் சம்பிரதாயச் சடங்காகச் செய்வதில் என்ன பயன் இருக்கிறது?*

*'நெஞ்சில் உரமும் இன்றி நேர்மைத் திறமும் இன்றி*<br>
*வஞ்சனை சொல்வாரடீ கிளியே வாய்ச் சொல்லில் வீரரடி*<br>
*தாயைக் கொல்லும் பஞ்சத்தைத் தடுக்க முயற்சியுறார்*<br>
*வாயைத் திறந்து சும்மா இனியே வந்தே மாதரம்*<br>
*என்பார் - என்று மனசாட்சியை மறுதலிப்பவர்களை மகாகவி பாரதியார் சாடுகிறார். வளர்ந்து வரும் விஞ்ஞான யுகத்தில், குற்றங்களும், கொலைச் சம்பவங்களும் கூடவே வளர்ந்து வருகின்றன.*

*அனைத்து இடங்களிலும் அனைவரின் நடவடிக்கைகளையும் கண்காணிக்க இரகசிய கமராக்கள் இப்போது பொருத்தப்படுகின்றன. ஆனால் பத்தாம் திருமுறையாகப் போற்றப்படும் திருமந்திர நூலில் திருமூலர் சொல்கிறார். ஆதிகாலத்திலிருந்தே அனைத்து இடங்களிலும் இரகசிய கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன! அந்த கண்காணிப்பு கருவி இல்லாத இடமே இல்லை. ஆனால், அதைக் கண்டு கொள்ளும் கண்கள்தான் நமக்கு இல்லை. 'அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்திருக்கும்' ஆண்டவனின் விழிகள் நாம் எங்கு சென்றாலும், எதைச் செய்தாலும் அதைப் படம் பிடித்துக் கொண்டே இருக்கிறது.*

*'கண்காணி இல் என்று கள்ளம் பல செய்வார்*<br>
*கண்காணி இல்லாத இடம் இல்லை காணுங்கால்*<br>
*கண்காணி ஆகக் கலந்து எங்கும் நின்றானைக்*<br>
*கண்காணி கண்டார் களவு ஒழிந்தாரே!'*

*அறிவுக் கண் கொண்டு ஆண்டவனைப் பார்ப்பவர்கள் தாம் செய்ய எண்ணும் தீய நடவடிக்கைகளிலிருந்து திருந்துவார்கள் என்கிறார் திருமூலர். இரகசிய கமரா அமைக்கப்பட்ட இடங்களிலும், அவ்வாறு அமைக்கப்படாத இடங்களில்கூட இறைவன் அத்தகைய கமராவாக தானே இயங்குகிறார் என்கின்றன ஞான நூல்கள். குறளின் குரலோ மேலும் ஓங்கி ஒலிக்கிறது:*

*"தன் நெஞ்சறிவது பொய்யற்க! பொய்த்தபின்*<br>
*தன் நெஞ்சே தன்னைச் சுடும்!"*

## செய்தித்துளிகள்

# தேங்காய்க்கு தட்டுப்பாடில்லை அதிக விலைக்கு விற்றால் சட்டநடவடிக்கை

(கொழும்பு)

தேங்காய் இறக்குமதிக்கான எவ்வித திட்டமும் எம்மிடம் இல்லை

நாட்டில் தேங்காய்க்கான தட்டுப்பாடு ஏற்படவில்லை என வர்த்தக அமைச்சின் செயலாளர் பத்ராணி ஜயவர்தன குறிப்பிட்டார்.

தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்து தேங்காய் விலையை அதிகரிக்க சில தரப்பினர் முயற்சிப்பதாகவும் தேங்காய்க்கு விதிக்கப்பட்டுள்ள நிர்ணய விலையை மாற்றுவதற்கான தேவை தற்போது இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிக விலையில் தேங்காய் விற்பனையில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (2)

# மழையுடனான காலநிலை அதிகரிக்கும்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை மேலும் அதிகரிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் தொடர்ச்சியாக மழை பெய்யும் சாத்தியம் காணப்படுவதாக வளி மண்டலவியல் திணைக்களம் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் குறிப்பாக வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மத்திய மலை நாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அத்திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக கொள்ளுமாறு பொது மக்களுக்கு அத்திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (2)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 140 | 120-140 | 140 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 200 |
| தக்காளி | 180 | 180 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 100 | 80 |
| கோவா | 120 | 140 | 120 | 120 |
| கரட் | 100 | 200 | 200 | 200 |
| பூசணி | 100 | 100 | 100 | 100 |
| புடோல் | 100 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 120 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 160 | 160 | 120-100 | 160 |
| பெரிய வெங்காயம் | 180 | 160 | 160 | 160 |
| பாகற்காய் | 300 | 260 | 250 | 280 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 130 | 120 |
| பயற்றங்காய் | 120 | 200 | 110 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 90-100 | 100 |
| கறிமிளகாய் | 300 | 260 | 270 | 300 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 170 | 80 |
| போஞ்சி | 320 | 250 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 40 | 120 | 120 | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 40 | 50 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 75 | 60-80 |
| இராசவள்ளி | -- | -- | -- | -- |
| வெங்காயப்பூ | 150 | 260 | -- | 280 |
| முள்ளங்கி | 80 | 80 | .70 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | — | -- | -- |




## முல்லாவிடம் இருந்த சக்தி!

தற்பெருமை பேசுபவர்களைக் கண்டால் முல்லாவுக்குப் பிடிக்காது. அவர்களை எவ்விதமாவது மட்டந்தட்ட அவர் முயற்சி செய்வார்.

ஒரு தடவை ஒரு மதச் சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக வெளிநாட்டில் இருந்து மதத் தலைவர்கள் சிலர் வந்திருந்தார்கள்.

அவர்கள் மக்கள் மத்தியில் சொற்பொழிவாற்றும் போது மதத்தைப் பற்றியோ கடவுளைப் பற்றியோ அதிகம் பேசாமல் தங்களுக்கு அதிசய சக்திகள் உண்டு என்றும் தாங்கள் விரும்பினால் நீரில் நடக்க முடியும், நெருப்பில் புகுந்து வெளிவர முடியும், மணலைக் கயிறாக திரிக்க முடியும் என்றும் அவர்கள் புராணத்தை தம்பட்டமடித்தே காலத்தை ஓட்டினர்.

கடைசியாக நன்றி கூறுவதற்காக வந்த முல்லா தனக்கும் சில சக்திகள் உண்டு என்றும் குறிப்பாக நல்ல இருளில் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் வழிநடக்க முடியும் என்றும் கூறினார்.

"விளக்கே இல்லாமல் அடர்ந்த காட்டில்கூட நல்ல இருளில் முல்லாவால் நடந்து செல்ல முடியுமா?" என்று மதத்தலைவர்கள் கேட்டனர்.

"முடியும்" என்று முல்லா கூறினார்.

அன்று இரவு உணவுக்குப் பிறகு, முல்லாவின் அந்த சிறப்பு ஆற்றலைப் பரிசோதனை செய்து பார்ப்பது என்று முடிவாயிற்று.

மதத் தலைவர்களும் உள்ளூர் பிரமுகர்கள் சிலரும் காட்டில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஆங்காங்கே நின்று முல்லாவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

அன்று உண்மையிலேயே இருள் மிகவும் அதிகமாக இருந்தது. மிகவும் அருகில் இருக்கும் பொருள் கூட கண்களில் படவில்லை.



குறுக்கும் நெடுக்குமாக நிற்கும் மரங்களை அடையாளம் கண்டு முல்லா எவ்வாறு இருளில் வருகிறார் என்று பார்க்க எல்லோரும் ஆவலோடு காத்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரம் கழித்து முல்லா ஒரு கைவிளக்கை எடுத்துக் கொண்டு நடந்து வந்தார்.

"இது என்ன? கைவிளக்கு வெளிச்சத்தில் நடந்து வருகிறீர். இருளில் அல்வா நடப்பதாக சவால் விட்டீர்" என்று மற்றவர்கள் கேட்டனர்.

"நண்பர்களே, எவ்வளவு பயங்கர இருளாக இருந்தாலும் எனக்குக் கண் நன்றாகத் தெரியும். ஆனால் நடந்து வருவது நான்தான் என்று உங்களுக்கெல்லாம் தெரிய வேண்டாமா? எனக்குப் பதிலாக வேறு ஆளை நடக்க விட்டு நான் உங்களை ஏமாற்றி விட்டேன் என்ற அவப்பெயர் நாளை வரக்கூடாதல்லாவா? அதனால் என்னை நீங்கள் அடையாளம் கண்டு பிடிப்பதற்காகத்தான் கைவிளக்குடன் நடந்து வந்தேன்" என்றார் முல்லா.

பிறகு முல்லா "அன்பார்ந்த மதத் தலைவர்களே உங்களிடமெல்லாம ஏதேதோ அமானுஷ்ய சக்தி இருப்பதாகக் கூறினீர்களே! அதற்கு என் சக்தி ஒன்றும் இளைத்ததல்ல" என்றார் முல்லா.

தங்களை மட்டம் தட்டவே இப்படி ஒரு நாடகத்தை முல்லா ஆடினார் என்பதை மதத் தலைவர்கள் உணர்ந்து கொண்டனர்.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## குடி உயரக் கோன் உயரும்!




வேதங்களையும் சாஸ்திரங்களையும் கற்பது ஒரு கல்வித் தகுதியாக வைக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்படுகிறவர் பதவிக்கு தகுதியானவராக இருக்க வேண்டும் என்பதற்காக இத்தகைய கடுமையான விதிமுறைகள் விதிக்கப்பட்டன.

வார்டினால் நியமிக்கப்பட்டவர்களின் பெயர்களை பனை ஓலையில் எழுதி ஒரு குடத்தில் அத்தனை ஓலைகளும் போடப்படும்.

பிறகு ஒரு சிறுவனை அழைத்து எத்தனை பதவிகளோ அதற்கேற்றாற் போல ஓலைகள் குடத்திலிருந்து எடுக்கப்படும். இது தான் ராஜராஜன் காலத்து குடவோலை முறை.

வேளாண் மக்கள் அதிகம் உள்ள பகுதிகளிலும் பிராமணர் அதிகம் உள்ள பகுதிகளிலும் முறையே வேளாளரும் பிராமணரும் மட்டும் தேர்தலில் பங்கேற்றார்கள்.

இருவரும் சேர்ந்து வாழும் பகுதிகளில் இருவரும் சமமாகப் பதவிக்கு வருகிற நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டது.

தேர்தலில் 30 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டால் அதில் 12 பேர் ஆண்டுக் குழுவிலும் 12 பேர் தோட்டக் குழுவிலும் இதர 6 பேர் ஏரிக்குழுவிலும் உறுப்பினர்களாக இருந்தார்கள்.

சரியாக வசூல் செய்வது, வரி தொடர்பான சிக்கல்களைத் தீர்ப்பது போன்றவை தலைவரின் முக்கிய கடமை.

சோழர் காலத்தின் மன்னரின் ஆணைகள் வாய்மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அரசர் தன் அமைச்சரையும் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்ட தலைமைச் செயலரையும் கலந்தாலோசித்துத்தான் தன் ஆணையைப் பிறப்பிப்பார்.

ஆனால் மக்கள் தங்கள் குறைகளை விண்ணப்பமாக எழுதித்தர வேண்டும்.

அந்த விண்ணப்பங்கள் பிறகு அரசு நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களான கோட்டத்து அவையினரான நாட்டார்கள், இராம தேயக் கிழவர்கள், தேவ தானத்து ஊர்களிலார், பள்ளிச் சந்தங்கள், கணமுற்றூட்டு, வெட்டிப் பேறு, நகரர்கள் என்கிற பெயர்கள் கொண்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களிடம் நடவடிக்கைக்காக அனுப்பப்படும்.

நீதிகள் வழங்கும் பொறுப்புக்கள் ஊர்ச் சபையினரிடமும் குலப் பெரிய தனக்காரரிடமும் வழங்கப்பட்டன.

வழக்குகளை விசாரிக்கவும் தீர்ப்பு வழங்கவும் விதிமுறைகள் விதிக்கப்பட்டன.

நீதிமன்ற நடுவர்கள் தாங்கள் நேரில் பார்த்ததைக் கொண்டு வழக்குகளை விசாரிக்கவும் தீர்ப்புக்கள் வழங்கவும் அனுமதிக்கப்பட்டார்கள்.

குற்றங்களுக்குத் தண்டனையாகக் குற்றவாளியின் உடைமைகளைப் பறிமுதல் செய்வதுதான் முக்கிய தண்டனையாக இருந்தது.

கொலைக்குற்றங்களுக்குக் குற்றவாளிகள் ஆலயத் திருப்பணி செய்யத் தண்டிக்கப்பட்டார்கள்.

(தொடரும்)

தவறுகளை ஒப்புக்கொள்ளும் தைரியமும், அதைத் திருத்திக் கொள்வதற்கான பலமும்தான் வெற்றிக்கான வழி. – லெனின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விக்னேஸ்வரன் தலைமையிலான குழு பிரதமர் மோடியைச் சந்திக்க வேண்டும்

ஈழத் தமிழ் மக்கள் யாருக்கும் எதிரானவர்கள் அல்ல. அதே சமயம் அவர்கள் தங்கள் உரிமையை விட்டுக் கொடுக்கவும் தயாரில்லை என்ற விடயம் இலங்கை ஆட்சியாளர்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் தமிழர் தாயகத்தில் நடந்தேறிய கதவடைப்புப் போராட்டம் தமிழ் மக்களின் நிலைப்பாட்டைத் தெட்டத்தெளிவாக எடுத்துக் கூறுவதாகும்,

எனவே தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றி இனப்பிரச்சினைக்கான தீர்வை இல்லாது செய்யலாம் என்று யார் நினைத்தாலும் அதன் விளைவுகள் அபத்தமாகவே இருக்கும்.

ஆகவே, தமிழ் மக்கள் நடத்திய கதவடைப்புப் போராட்டம் அவர்களது உரிமைக்கானது.

இது விடயத்தில் ஆட்சியாளர்களோ அன்றி சிங்கள மக்களோ அல்லது படைத்தரப்பினரோ சீற்றம் கொள்ள வேண்டியதில்லை.

இந்த நாடு கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக யுத்தத்தை எதிர்கொண்டிருந்தது. யுத்தத்தின் பின்னணி, சிறுபான்மைத் தமிழ் இனத்துக்கு எதிரான பேரினவாதத்தின் கோரத் தாண்டவம் என்பதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

காலத்துக்குக் காலம் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட பெருந்துயரம் இந்த நாட்டின் இருண்ட பக்கமாகும்.

ஆகையால் தமிழ் மக்கள் இந்த நாட்டில் அனைத்து உரிமைகளுடன் வாழுகின்ற சூழ்நிலை ஏற்படுத்தப்படுவது அவசியம்.

இல்லையென்றால், எந்த நேரத்திலும் எதுவும் நடந்தாகலாம் என்ற பயப்பீதியுடனேயே தமிழ் மக்கள் வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை நீடிக்கும்.

ஆக, எமது இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு தேவை.

எங்களுக்கான தீர்வு என்பது இந்தியாவை ஓரங்கட்டியதாக இருக்க முடியாது.

தவிர, வெளிநாடுகளின் அழுத்தம் இன்றியும் இலங்கை ஆட்சியாளர்கள் நமக்கு எதனையும் தந்துவிடப் போவதுமில்லை.

எனவே இருபதாவது திருத்தச் சட்டமூலத்தை அரங்கேற்றவும் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை மெதுவாகக் கழற்றிவிடவும் சமகால ஆட்சியாளர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு முன்னதாக, ஒன்றிணைந்த தமிழ் அரசியல் பிரதிநிதிகள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் இந்தியப் பிரதமர் மோடியை அவசரமாகச் சந்தித்தாக வேண்டும்.

இச்சந்திப்பை கொரோனா சூழ்நிலைகளுக்கு ஏற்ப, சாத்தியமான அணுகுமுறைகளுக்கவாக அமைத்துக் கொள்ளலாம்.

# மட்டு.வாவியில் சட்டவிரோத செயற்பாடுகளினால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிப்பு

## கடற்றொழில் அமைச்சிடம் முறையீடு

(கொழும்பு)

மட்டக்களப்பில் சுமார் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்வாதார அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் நிலையில், குறித்த ஆபத்தில் இருந்து பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள சந்திக்கும் தினமான நேற்று முன்தினம் மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சின் அலுவலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்த மட்டக்களப்பு நாவலடி கிராமிய கடற்றொழிலாளர்கள் அமைப்பின் பிரதிநிதிகளால் குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சட்டவிரோத மீன்பிடிச் செயற்பாடுகள் தொடர்பில் அமைச்சரின்கவனத்திற்கு கொண்டு வந்த குறித்த பிரதிநிதிகள், மட்டக்களப்பு வாவிப் பகுதியில் மேற்கொள்ளப்படும் சட்ட விரோத செயற்பாடுளால் மீன் இனங்கள் அழிவடைந்து வருவதாகவும் இதன் காரணமாக வாவியை நம்பி வாழுகின்ற சுமார் 11 ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரம் கேள்விக் குறிக்கு உள்ளாகியிருப்பதாவும் முறையிட்டனர்.

மேலும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கடற்றொழில் அமைச்சராக இருந்த காலப் பகுதியில், மட்டக்களப்பு வாவி மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவுகளிலும் எவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட முடியும் என்று வரையறுக்கப்பட்டுள்ள போதிலும், குறித்த வரையறைகள் பின்பற்றப்படாதமையினாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அமைச்சரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

அத்துடன் மட்டக்களப்பின் முகத்துவாரப் பகுதி நீண்ட காலமாக சுத்தப்படுத்தி மண் திட்டுக்கள் அகற்றப்படாமல் காணப்படுவதால் வாவியில் மீன் உற்பத்திகள் குறைவடைந்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதுதொடர்பாக கவனம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மட்டக்களப்பு கடற்றொழிலாளர் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொளுமாறு கடற்றொழில். திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தை கேட்டுக் கொண்டதுடன், தனக்கு பூரண அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறும் அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## சிறுபான்மைக் கட்சிகள் ஒன்றுபட வேண்டும்

(ஏறாவூர்)

20 ஆவது திருத்த சட்டமூலம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இதுவரை எந்தவொரு தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை என கட்சியின் பிரதித் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஹாபீஸ் நஷீர் அஹமட் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், 20ஆவது திருத்த சட்டமூலத்திற்கு எதிராக நீதிமன்றம் சென்றுள்ள நிலையில், அது தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துரைத்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், 20 ஆவது திருத்த சட்டமூலம், இன்னும் முழுமை பெறாத நிலையிலேயே உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கமைய, 20 ஆவது திருத்தம் தொடர்பில் பொறுமையாக செயற்பட்டு, இறுதி நேரத்திலேயே சரியான தீர்மானத்தினை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் சிறுபான்மை கட்சிகள் ஒன்றிணைந்து கலந்துரையாட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, நல்லாட்சி அரசாங்கத்திற்கு சிறுபான்மை கட்சிகள் ஆதரவு வழங்கிய போதிலும், நல்லாட்சி அரசாங்கம் சிறுபான்மை மக்களை ஏமாற்றியதாக .அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## பசுவதை தடைக்கு ஆதரவு நல்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் பசுவதையை தடைசெய்து தெய்வீகப் பசுக்கள், இடபங்களை பாதுகாப்பதற்கு பூரண ஆதரவு நல்கும் நிகழ்வு பசுக்கள், இடபங்களை பாதுகாக்கும் சகல சமய நிறுவனங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் நாளை வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தல்லைமையில் இடம்பெற வுள்ளது.

இந் நிகழ்வில் பிரதமரின் இந்து சமய இணைப்பாளர் பிரம்மஸ்ரீ ராமச்சந்திரக் குருக்கள் பாபுசர்மா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-03)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

படிப்பில் அறிவு வளருமே தவிர ஒழுக்கம் வந்து விடாது.

மு.வரதராசனா

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 30 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

கிளிநொச்சி பிரதேசத்தில் அம்பகாமம், புலுமெச்சிணாதிகுளம்,

ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

## மன்னாரில் நடைபெற்ற சர்வமதக் குழுக் கூட்டம்

(மன்னார்)

மத ரீதியான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக மன்னார் மாவட்டத்திலுள்ள சர்வமத குழு பிரதிநிதிகளை உள்ளடக்கி ஏற்பாடு செய்ய ப்பட்ட பிரதேச சர்வமத குழுக் கூட்டம் நேற்று செவ்வாய்கிழமை தேசிய சமாதான பேரவையின் ஏற்பாட்டில் தொடர்பாடலுக்கான மையத்தின் (CCT) மாவட்ட இணைப்பாளர் ஜோண்சண் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது.

மத சகவாழ்வுக்கான கூட்டு ஈடுபாடு எனும் தொனிப் பொருளில் மாவட்ட ரீதியில் காணப்படுகின்ற மத ரீதியான பிரச்சினைகளை அடையாளம் கண்டு புரிந்துணர்வு மூலம் குறித்த பிரச்சினைகளை தீர்த்து வைப்பது தொடர்பாகவும் கடந்த வருடங்களில் இலங் கையில் உள்ள நகரசபை பிரிவுகளில் உள்ள மக்களிடம் மேற்கொள்ளப்பட்ட மதரீதியான ஆய்வு தொடர்பான விவரங்களை கலந்தாலோசிக்கும் முகமாகவும் மேற்படி நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

குறித்த நிகழ்வுக்கு மன்னார் மாவட்டத்தை சேர்ந்த சர்வ மதத் தலைவர்கள் உட்பட அரச உத்தியோகஸ்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுதாய பொலிஸ் உத்தியோகஸ்தர்கள், ஊடகவியளாலர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் இறுதியில் அண்மைகாலமாக மன்னார் மாவட்டத்தில் அதிகரித்துவரும் மத ரீதியான முரண்பாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும் புதிய பிரச்சினைகள் தோற்றம் பெறாமல் பாதுகாப்பது தொடர்பாகவும் அதே நேரத்தில் குறித்த பிரதேச சர்வமத குழுவை நிலை பெறு தன்மையுடைய குழுவாக மாற்றியமைப்பதற்கான விடயங்கள் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(5-4-285)

# சுப்பர் ஓவரை தமதாக்கிய விராட் - ஏபிடி

## மும்பையை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது பெங்களூர்

ஐபிஎல் தொடரின்10 ஆவது லீக் ஆட்டம் டுபாயில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் விளையாடின. டாஸ் வென்ற மும்பை இந்தியன்ஸ் பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் ஆரோன் பிஞ்ச் - தேவ்தத் படிக்கல் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

தேவ்தத் படிக்கல் நிதானமாக விளையாட, ஆரோன் பிஞ்ச் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

போட்டியில் ஆரோன் பின்ஞ் 35 பந்தில் 7 பவுண்டரி, 1 சிக்சருடன் 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அப்போது ஆர்சிபி 1 விக்கெட் இழப்பிற்கு 81 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அடுத்து விராட் ஹோலி களம் இறங்கினார். அவர் 11 பந்தில் 3 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஏமாற்றம் அளித்தார்.

அடுத்து டிவில்லியர்ஸ் களம் இறங்கினார். அதன்பின் படிக்கல் ஆட்டத்தில் வேகம் பிடித்தது.

தொடர்ந்து விளையாடிய படிக்கல், 40 பந்தில் 54 ஓட்டங்கள் எடுத்து போல்ட் பந்தில் ஆட்டமிழந்தார்.

மறுபக்கம் டிவில்லியர்ஸ் மும்பையின் பந்து வீச்சை புரட்டி எடுத்தார். 19 ஆவது ஓவரின் கடைசி பந்தை சிக்சருக்கு விரட்டி டிவில்லியர்ஸ் 23 பந்தில் 4 பவுண்டரி, 4 சிக்சருடன் அரைசதம் கடந்தார்.

கடைசி ஓவரில் ஷவம் டுபே இரண்டு சிக்ஸ் விளாசி ராயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் 20 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 201 ஓட்டங்கள் குவித்தது.

மும்பை தரப்பில் டிரண்ட் போல்ட் அதிகபட்சமாக 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

202 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை அணியின் தொடக்க வீரர்களாக கப்டன் ரோகித் சர்மா மற்றும் குயின்டன் டிகாக் களமிறங்கினர்.

8 பந்துகளை சந்தித்து ஒரு சிக்சர் உட்பட 8 ஓட்டங்கள் எடுத்திருந்த ரோகித் சர்மா வாஷிங்டன் சுந்தர் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

தொடக்க வீரனான டிக்காக்கும் 14 ஓட்டங்களில் வெளியேறினார். பின்னர் களமிறங்கிய இஷான் கிஷன்- பொல்லார்ட் ஜோடி சிறப்பாக ஆடியது இஷான் கிஷன் 58 பந்துகளில் 2 பவுண்டரிகள், 9 சிக்சர்கள் உட்பட 99 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

கடைசிப் பந்தில் 5 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் உடானா வீசிய பந்தை பொல்லார்ட் பவுண்டரிக்கு விளாச மும்பை அணி 201 பெற இரு அணிகளது ஸ்கோரும் சமநிலையடைந்தது. சுப்பர் ஓவரில் முதலில் பட்டிங் செய்த மும்பை இந்தியன்ஸ் அணியின் பாண்ட்யா, பொல்லாட் தொடக்க வீரர்களாக களமிறங்கினர். சுப்பர் ஓவர் முடிவில் மும்பை அணி 7 ஓட்டங்களைப் பெற்றது. இதையடுத்து 6 பந்தில் 8 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பெங்களூர் அணியின் தொடக்க வீரர்களாக விராட் ஹோலி மற்றும் டிவில்லியர்ஸ் களமிறங்கினர். மும்பை அணியின் பும்ரா சுப்பர் ஓவரை வீசினார்.



சிறப்பாக ஆடிய ஏபிடி - வீராட் ஜோடி சுப்பர் ஓவரை தம்வசமாக்கி போட்டியில் மும்பையை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. (4)

# பில்சன், நிரோஜன் இணைப்பாட்டம்

## யாழ். சென்றல் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி



AB விளையாட்டுக்கழகம் நடத்தும் ஐம்பது பந்து பரிமாற்றங்களை கொண்ட மேற்படி தொடருக்கான சுற்றுப் போட்டியில் இரண்டாவது அரை இறுதிப் போட்டியில் யாழ்.சென்றல் அணி கே.சி.சி.சி அணியை 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குதகுதி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கே.சி.சி.சி அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி. அணி 39.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 162 ஓட்டங்களை பெற்றது.

பிரதாபன் 16, நிரோசிகன் 11, பானுஜன் 21, சாம்பவன் ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களைப் பெற்றனர்.


களத்தடுப்பில் யாழ்.சென்றல் அணி சார்பாக சதிஸ்கரன் 4, காலெப் 02, சுபாதீஸ், மதுசன் 01 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் அணி 35.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது.

மதிய உணவு வரை 4 விக்கெட்டுக்களை இழந்து 33 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தனர்.

மதிய உணவின் பின் விக்கெட் இழப்பின்றி பில்சன் ஆட்டமிழக்காது 61, நிரோஜன் 51 ஓட்டங்களுடன் 132 ஓட்டங்களைப்பெற்று வெற்றி பெற்றனர்.

களத்தடுப்பில் கே.சி.சி.சி. அணிசார்பாக பிரதீஸ் 3, நிரூசிகன் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.



இப் போட்டியில் வெற்றி பெற்ற யாழ். சென்றல் அணி இறுதிப் போட்டியில் யாழ்.ஜொனியன்ஸ் அணியை எதிர் கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# கராத்தே பயிற்றுவிப்பாளர்களுக்கான


## விசேட செயலமர்வு

வடக்கு மாகாண கராத்தே பயிற்றுவிப்பாளர்களுக்கான விசேட செயலமர்வு யாழ்ப்பாணம் கிரீன் பீல்ட் சனசமூக நிலைய விளையாட்டுக்கழக மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

வடக்கு மாகாண கராத்தே பயிற்றுவிப்பாளர்கள், ஆசிரியர்கள், நெறியாளர்களின் தரத்தை உயர்த்துவதற்காக குறித்த செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெறுகிறது. குறித்த செயலமர்வு தொடர்பில் வடக்கு மாகாண கராத்தே சம்மேளன தலைவர் கருத்துத் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் கராத்தே பயிலும் மாணவர்கள் கராத்தே துறையில் வளர்ச்சியடைந்து தேசிய ரீதியில் அதாவது மாவட்ட, மாகாண தேசிய ரீதியில் நிறைய பதக்கங்களை பெற்று முன்னேறி வருகின்றனர்.

அதனை மேலும் வலுப்படுத்துவதற்காக வடக்கு மாகாணத்தில் உள்ள கராத்தே நெறியாளர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களின் தரத்தை உயர்த்தும் முகமாக வடமாகாணத்தில் உள்ள அனைத்து கராத்தே ஆசிரியர்களுக்குமான விசேட செயலமர்வொன்று நடத்தப்படுகின்றது.



அத்தோடு கராத்தே சம்மேளனத்தில் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் நெறியாளர்களை பதிவு செய்து அவர்களின்தரத்தை உயர்த்துவதற்காகவும் இலங்கை கராத்தே சங்கத்தைச் சேர்ந்த இலங்கை ரீதியில் நடுவராகச் செயற்பட்டு வரும் சிரான் அலெக்சாண்டர் மற்றும் ரவூப் ஆகியோர் நெறியாளரார்களாக கலந்து கொண்டு இச்செயலமர்வினை மேற்கொண்டுள்ளார்கள்.

வடமாகாண கராத்தே மாணவர்கள் போட்டிகளின்போது வெற்றி பெற முடியாததற்கான காரணங்களை அறிந்து அதனை மாற்றியமைக்கும் முகமாக இந்தப் பயிற்சியானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கராத்தே ஆசிரியர்கள் அனைவருக்கும் இந்தப் பயிற்சி நெறி வழங்கப்படுகின்றது. இந்த பயிற்சியின் மூலம் எதிர்காலத்தில் எமது வடக்கு மாணவர்கள் போட்டிகளில் பங்குபற்றி தங்கப்பதக்கங்களை வெற்றி அடைய முடியுமென அவர் மேலும் தெரிவித்தார். (4)

## கிளிநொச்சியில்...

யளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான நபரின் சடலம் அடையாளம் காணமுடியாத அளவு உருக்குலைந்த நிலையில் காணப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,100)

## நாட்டின் பாது...

வழங்கிய பிரதமர் மகிந்த,

நாட்டின் பாதுகாப்புக்கு எவ் வகையிலும், இது அச்சுறுத்தலாக அமையவில்லை. நாடு முழுமையான பாதுகாப்பின் கீழ் இருக்கிறது.

நாட்டில் எந்தவிதமான வன்முறைகளுக்கோ அல்லது அச்சுறுத்தல்களுக்கோ இடமில்லை. முழுமையான பாதுகாப்பு விடயத்தை உறுதி செய்துள்ளதாக குறிப்பிட்டார். (ம-3)

## இறைச்சிக்காக...

அமைச்சரவைப் பத்திரத்தை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தாக்கல் செய்திருந்ததுடன் அதற்கு அமைச்சரவை அனுமதியும் வழங்கியுள்ளது.

இதனடிப்படையில், இந்த யோசனை சட்டமூலமாக தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட பின்னர் சட்டமாக மாறும்.

இந்த யோசனை இதற்கு முன்னர் ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திலும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

எவ்வாறாயினும் இறைச்சிக்காக மாடுகள் அறுக்கப்படுவதை தடை செய்யும் சட்டத்திற்கு விலங்கு உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் ஏற்கெனவே எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர்.

மாடு அறுப்புத்தடை செய்யப்பட்டால் காளை மாடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் எனவும் இதனால், விலங்கு உற்பத்தியாளர்களுக்கு பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்படும் எனவும் அவர்கள் கூறியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கஞ்சாவுடன்...

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(ம-3,316)

## 13ஆவது அரசிய...

நரேந்திர மோடியுடனான காணொளி கலந்துரையாடலின்போது, இந்திய பிரதமர் 13ஆவது திருத்தத்தை நடை முறைப் படுத்துமாறு வலியுறுத்தியதாக வெளியான செய்தி குறித்து கேள்வி எழுப்பிய போதே அவர் இதனைக் குறிப் பிட்டார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஊடக நிறுவனங்களின் பிரதானிகளை கொழும்பில் நேற்று சந்தித்து கலந்துரையாடியபோதே, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் அவர் பதில் வழங்கியிருந்தார்.

13ஆவது திருத்தத்திலுள்ள மாகாண சபைத் தேர்தல், தனது காலப் பகுதியிலேயே உரிய நேரத்தில் நடத்தப்பட்டதாகவும் அவர் நினைவூட்டினார்.

13ஆவது திருத்தம் தொடர்பில் இந்திய பிரதமர் என்ன கூறினார் என வினவிய போது, இந்தியப் பிரதமருடன் கலந்துரையாடிய விடயங்களை தான் மறந்து விட்டதாகவும் அவர் பதிலளித்தார். (ம-3)

## 20க்கு எவ்வித...

குறித்த சந்திப்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்தார்.

**ஊடகவியலாளர்:** 20ஆவது திருத்தம் தொடர்பில் பிரதமரின் கருத்து என்ன?

**பிரதமர்:** அரசாங்கம் எனும்போது, அரசாங்கத்தின் கருத்தே எனது கருத்தாகும். 20ஆவது திருத்தத்திற்கு எவ்வித சிக்கலும் ஏற்படாது.

**ஊடகவியலாளர்:** 20ஆவது திருத்தம் தொடர்பில் அரசாங்கத்திற்கு சார்பான கட்சிகளினால் குழு நியமிக்கப்பட்டுள்ளது அல்லவா?

**பிரதமர்:** அனைத்துக் கட்சிகளுக்கும் அது தொடர்பில் குழுக்களை நியமிப்பதற்கு அதிகாரம் உள்ளது. 20ஆவது திருத்தம் தொடர்பில் நாம் அனைவருடனும் அமைச்சரவை கூட்டத்தின் போது கலந்துரையாடினோம். எதிர்க் கட்சியும் குழுவொன்றை நியமித்துள்ளதாக அறிகிறேன்.

**ஊடகவியலாளர்:** 20ஆவது திருத்தத்தின் பின்னர் பிரதமர் பெயரளவிலானவராக மாறுவாரா?

**பிரதமர்:** இல்லை. அது பிரதமரின் கைகளிலேயே உள்ளது.

**ஊடகவியலாளர்:** புதிய அரசியலமைப் பொன்றை கொண்டு வரவுள்ளீர்களா?

**அமைச்சர் உதய கம்மன்பில:** புதிய அரசியலமைப்பு வரைபொன்றை தயாரிப்பதற்கு அமைச்சரவையில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் வாக்கெடுப்பொன்றுக்கு செல்ல வேண்டும்.

**பிரதமர்:** அரசியலமைப்பு முழுவதும் மாற்றம் செய்யப்படின் வாக்கெடுப்பிற்கு செல்வது அவசியமாகும். ஆனால், எமக்கு அந்த மக்கள் ஆணை தெளிவாக கிடைக்கப் பெற்றுள்ளது.

**அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல:** 19ஆவது அரசிலமைப்பை நீக்க வேண்டும் என்றே எமக்கு மக்கள் ஆணை கிடைத்தது. அது குறுகிய கால தீர்வு. புதிய அரசியலமைப் பொன்றை கொண்டு வருவது நீண்ட கால தீர்வாக அமையும். (ம-3)

## விபத்தில் படுகாய...

(வயது - 63) என்பவர் சுன்னாகம் பகுதியில் வீதியைக் கடக்கும்போது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மேலும் யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியை சேர்ந்த அருட்தந்தை விக்டர் ஜெயசிங்கம் (வயது - 65) என்பவர் கடந்த 2ஆம் திகதி கொழும்புத்துறையில் இருந்து யாழ் நோக்கி துவிச்சக்கரவண்டியில் வந்தபோது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதி படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று மதியம் உயிரிழந்துள்ளார்.

இவர்களது மரண விசாரணைகளை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,9)

## பளை தம்பகாமம்...

பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு எலும்புக்கூடாக கண்டு பிடிக்கப்பட்டவர் செம்பியன்பற்று தெற்கைச் சேர்ந்த கார்த்திகேசு சுந்தரமூர்த்தி (வயது- 56) என தெரிவிக்கப்படுகிறது.

காட்டுப் பகுதியில் எலும்புக்கூடு இருப்பதாக பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து அப்பகுதிக்கு பொலிஸார், இராணுவத்தினர் சென்றுள்ளனர். சாரம் ஒன்றும் தலைமுடியும் காணப்பட்டுள்ளது. சற்று தொலைவில் மண்டை ஓடும் காணப்பட்டுள்ளது.

இவ் எலும்புக்கூட்டுக்கு உரியவர் கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்னர் காணாமல் போன செம்பியன் பற்று தெற்கைச் சேர்ந்தவர் என சாரத்தின் அடையாளத்தைக் கொண்டு அவரின் உறவினர்கள் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இன்று புதன்கிழமை கிளிநொச்சி நீதவான் எலும்புக் கூட்டினை பார்வையிட்டு விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-3,60,316)

## முகநூலில்...

கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-3,30)

## 20ஆவது திருத்...

எடுத்த பின்னர் கட்சி 20ஆவது திருத்தத்துக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட ஆரம்பித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபர் ஐந்தாம் திகதி நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் கறுப்பு கொடி ஏற்றப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் 20ஆவது திருத்தம் குறித்து மக்களுக்கு துண்டுப்பிரசுரத்தை விநியோகிக்கும் நடவடிக்கையும் இடம் பெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் இடம்பெறும் ஆர்ப்பாட்டத்தில் அனைத்து கட்சிகளும் தொழிற் சங்கங்களும் சிவில் அமைப்புகளும் கலந்துகொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

தன நிதானய
திகதி - 2020.09.29
சீட்டிழுப்பு இலக்கம் - 322
Y 41 48 61 75

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 29-09-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2555
I 05 12 28 62

மஹஜன சம்பத
திகதி 2020/09/29
சீட்டிழுப்பு இலக்கம் 4260
J 3 5 9 2 9 5

நீரோகா
திகதி 29/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0707
சிம்மம் 44 58 59 71

மெகா பவர்
திகதி 29/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0627
N 24 12 19 68 77

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1230 நிறம் இளநீலம்
சீட்டிழுப்பு திகதி 29.09.2020 தினம் செவ்வாய்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
V 06 38 61 72
75,04,10,529.20
SUPER 500 3 7 0 0

I 65 71 72 76
631
29.09 2020
அடுத்த சுபர் ஜக்பொட் ரூ. 8,48,98,465
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1056
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.09.29
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 74,088,400/-
வெற்றி இலக்கங்கள் 35 52 69 75 G
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 7551
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 641
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.09.29
சீட்டிழுப்பு இல.: 3386
வர்ணம் : இளநீலம்
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 43,279,839.40
வெற்றி இலக்கங்கள் 07 52 54 66 Y
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 2809
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
திகதி 29.09.2020 வெற்றி வாரம் 2937 வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 17 24 54 61 கன்னி
ரூ.500 பரிசுக்குரிய 7579
ரூ.100 பரிசுக்குரிய 610
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,086,960
தொ. பே. : 0112 333 546/47
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

# 20 ஆவது திருத்தத்தை ஆதரித்து 07 இடையீட்டு மனு தாக்கல்

(கொழும்பு)


இலங்கை அரசாங்கத்தால் பாராளு மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அரசியல மைப்பின் 20 ஆவது திருத்தத்தை ஆதரித்து ஏழு இடையீட்டு மனுக்கள் நேற்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

7 மனுக்களில், மூன்று மனுக்களை, அமைச்சர்கள் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், நிமல் சிறிபாலா டி சில்வா மற்றும் காமினி லோகுகே ஆகியோர் தாக்கல் செய்தனர்.

அரசியலமைப்பில் முன்மொழியப்பட்ட 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக பொதுஜன பெரமுனவின் பொதுச் செய லாளர் சாகரா கரியவாசமும் மனு தாக்கல் செய்தார்.

20ஆவது திருத்த வரைபு தற்போ துள்ள அரசியலமைப்பிற்கு இணங்குவதா கவும், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் ஒப்புதல் போதுமானதாக இருப்பதால் சர்வஜன வாக்கெடுப்பில் ஒப்புதல் அளிக்கத் தேவையில்லை என்றும் மனுதாரர்கள் தமது மனுக்களில் தெரிவித்துள்ளனர். (ம-03)

# முதியவரைக் காணவில்லை



(யாழ்ப்பாணம்)

நாவாந்துறைப் பகுதியில் கடந்த மூன்று நாட்களாக முதியவரைக் காண வில்லை என உறவினர்களால் தெரிவிக் கப்பட்டுகின்றது.

இவ்வாறு காணாமல் போனவர் இல. 68 கடற்கரை வீதி, நாவாந்துறையைச் சேர்ந்த 80 வயதுடைய கனகசபை கணப திப்பிள்ளை ஆவார்.

வீட்டில் இருந்த குறித்த முதியவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.00 மணியி லிருந்து காணவில்லை என உறவி னர்களால் தெரிவிக்கப்படு கின்றது.

இவரைக் கண்டவர்கள் 077 609 0452, 077 466 8462 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (ம-03)

# திலீபன் கொலையாளியாம்! அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

திலீபன் ஒரு கொலையாளி எனவும் அவருக்கு நினைவேந்தல் நடத்த வேண் டியதில்லை எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஊடக பிரதானிகளுக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நடை பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்ட போதே நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா இதனைக் கூறினார்

திலீபனின் நினைவேந்தலை நடத்த அனுமதிக்க கோரி வடக்கு கிழக்கில் நேற்று முன்தினம் நிர்வாக முடக்கல் போராட்டம் முன்னெடுக்கப் பட்டதுடன், தமிழ் தேசிய கட்சிகள் உணவுத்தவிர்ப்பு போராட்டத்தையும் முன் னெடுத்தன.

இது குறித்து ஊடகவியலாளர்கள் பிரதமரிடம் கேள்வி எழுப்பியபோது உடன டியாக குறுக்கிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, திலீபன் ஒரு கொலையாளி என்றும் அவருக்கு நினைவேந்தல் நடத்த வேண்டியதில்லை என்றும் கூறினார்.

தனது தம்பியை அவரே சுடத்தியதாக கூறிய டக்ளஸ் தேவானந்தா அரசியல் தேவைக்காகவே அவருக்கு நினை வஞ்சலி நடத்த முயற்சிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். (ம-03)

# போயாதின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சேர் பொன்.இராமநாதன் வீதி, திரு நெல்வேலியில் அமைந்துள்ள சத்திய சாயிசேவா நிலையத்தின் போயாதின நிகழ் வுகள் நாளை வியாழக்கிழமை காலை 8.45 மணிக்கு இடம் பெறும்.

இந்நிகழ்வில் முன்னாள் தபாலதிபர் ந.யாதவகுலசிங்கம் சிறப்புரையாற்று வார். (ம-03)


நாடகம் கருத்தரங்கு
2020 A/L
வியாழன் 01.10.2020
வெள்ளி 02.10.2020
( 8.00 a.m - 1.00 p.m ) (C-405)
( வெளி மாணவர்களும் பங்குபற்றலாம். )
D.M.I

கார்கள் வாடகைக்கு உண்டு
கார்கள் நாள் வாடகைக்கு சாரதி இல்லாமல் அல்லது சாரதியுடன் வாடகைக்கு விடப்படும். (4325)
077 898 9691
( யாழ்ப்பாணம் )

தரமான முறையில் மாபிள் பதித்து கொடுக்கப்படும். (4318)
077 187 6805
A.ஜீவா

காணி விற்பனைக்கு
நெடுங்குளம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணத்தில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(2 பரப்புக்களாக பிரித்தும் கொடுக்கப்படும்.)
பரப்பு ஆறு இலட்சம்
தரகர் தேவையில்லை (4100)
077 468 3354 / 076 221 2037

வேலையாட்கள் தேவை
நெல்லியடியில் இயங்கும் சைவ உணவ கத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
சமையலாளர், சமையல் உதவியாளர், சுத்தப்படுத்துபவர் (Cleaning)
◆ அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
◆ தங்குமிட வசதியும் உண்டு. (C-431)
077 219 0128

வகுப்புக்கள்
German, Swiss செல்வோருக்கான Personal வகுப்புக்கள். A1 பரீட்சைக்குரிய இலகுவான வழிகாட்டலுக்கு. (C-391)
தொடர்பு
076 401 8564

ஹோட்டல் மனேஜ்மென்ட்
அரசாங்க, சர்வதேச அங்கீகார சான்றிதழ்





பயிற்சிக் காலத்தில் ரூ.1 லட்சம் வரை வருமானம்
100% வேலைவாய்ப்பு
இலவச ஆங்கில வகுப்பு
தமிழ் - ஆங்கில மொழி மூலமான விரிவுரைகள்
ஆரம்பம் 02 OCT 2020
+Certificate in hotel and resort management LKR - 30,000.00 (520 hrs)
+Certificate in international cookery & Culnary Arts LKR 60,000.00 (600 hrs)
T.P: 076 057 9999, 021 314 6171
No.1544, K.K.S Road, Jaffna. (C-443)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
ராஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: ராஜ் - 077 679 6623 (4320)

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச் Courses
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma (DELF A1, A2, B1, B2)
V. ஜெகன் (Trained in France) (C-392)
40, பலாலி வீதி, அரியாலை. 0779 789 456 / 021 222 7781
23/2, சோமசுந்தரம் அவெனியு, சுண்டுக்குளி/ சேரி. Near the Fuel Station. 0779 789 456 / 021 221 9497
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் Work / Student Visa கான IELTS வகுப்புக்கள்.

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
A/L தொழில்நுட்ப பிரிவு 2022
பொறியியல் தொழினுட்பம், உயிர்முறைமைகள் தொழினுட்பம்
புதிய பிரிவு ஆரம்பம்
10.10.2020 காலை 08.00 மணிக்கு (C-441)
(சகல பாடங்களும் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்)
AL 2021, 2022 பொறியியல், உயிர்முறைமைகள் தொழினுட்பப்பிரிவு மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா
கண்டி, நுவரெலியா, ஹட்டன் October 19,20,21
➜ ஆராய்ச்சி நிலையம்.
➜ பண்ணை (New Zealand Farm).
➜ Tissue Culture Lab.
➜ Automobile lab பார்வையிடப்படும்.
தொடர்புகளுக்கு 077 017 5346, 077 170 3549

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலண்ட் ஸ்பெயின் 1250/= (C-392)
மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை
லண்டன்-1050/=, பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-கொலண்ட் - 1150/=
கனடா - அமெரிக்கா - 1450/= சுவிஸ் - 1400/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
வெளிநாட்டில் வரி அறவிடப்படும் சாத்தியம் உள்ளது
இந்தியா – டுபாய் – சைனா போன்ற நாடுகளில் இருந்து பொருட்களை விரைவாக பெற்றுக் கொள்ள தொடர்புகொள்ளவும்
070 330 5500 | 077 888 9388 | 075 330 5500

கனடாவில் வேலைவாய்ப்பு/கல்வி கருத்தரங்கு
3 year work permits குடும்பத்துடன் நிரந்தரமாக தங்கலாம்
Home support worker வருடத்திற்கு 2500 வீசா வாய்ப்புக்கள்
Home child care provider வருடத்திற்கு 2500 வீசா வாய்ப்புக்கள்
அடிப்படைக்கல்வித்தகுதி :- A/L
● வயதெல்லை :- 19 முதல் 50 வரை
ஞாயிறு காலை 11 மணி 04-10-2020
அனுமதி இலவசம்
CANADA MIGRATION PILOT
CIMS (C-308)
Saaruban Sivaratnam
Regulated Canadian Immigration Consultant
(MBA,B.Eng) - RCIC # 519684
Member of Immigration Consultants of Canada Regulatory Council
Member of Canadian Association of Professional Immigration Consultants
CIMS COLLEGE
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
0777069777/0777068777

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1025/=Kg (C-308)
பிரான்ஸ்/ஜேர்மனி/டென்மார்க் நெதர்லாந்து/இத்தாலி/சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, கொடிகாமம், மானிப்பாய், புதுக்குடியிருப்பு, சுன்னாகம், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
DHL
0768226240

அமெரிக்க லொத்தர் விசா
2020
நீங்களும் இந்த ஆண்டு அமெரிக்க லொத்தர் வீசா அதிஸ்டசாலி ஆகலாம்.
இறுதி நேர ஏமாற்றத்தினை தவிர்த்திட உடனடியாக கடவுச்சீட்டினை எடுத்து வைத்துக்கொள்ளுங்கள் (C-308)
என்றும் உங்கள் மீது அக்கறையுடன் V2 TRAVELS
0768226244


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.